# பிள்ளைக்குணம்



JPL
C8424

திருமதி சரோஜினிதேவி சிவஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதி துணை

# பிள்ளைக்குணம்



சர்வமதங்களும் அவரவர் மனநிலையில்

சார்ந்து நின்று இறைவனைத்தேடும் மானிடவாழ்வீது

தோற்றமும் மறைவும் தொல்லுலகம் கண்ட உண்மை

மாற்றமில்லா நிறைவு காண உலகில் விழித்திடுக

போற்றி புகழ் பூப்பதற்கு பிள்ளை நல் மணிகாள்

சாற்றிய "பிள்ளைக் குணத்தோடு" வாழ்வீர் நீடுழி

சினமும் சீறலும் வேண்டாம் சீர்பெற்று

மலர்கநின் மதிநுட்பம்.

195121 C.C.

வெளியீடு

குருஷேஸ்த்ரா கல்வி வெளியீடு
42B, மத்திய வீதி,
உவர்மலை, திருக்கோணமலை.
தொ.பே: 026-4920217

195121
474 C.C
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "பிள்ளைக்குணம்" |
| ஆசிரியர் பெயர் | : | திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு விபரம் | : | முதலாம் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2006 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொத்த பக்கம் | : | IX + 33 = 42 |
| வெளியீடு | : | குருஷேத்ரா கல்வி வெளியீடு<br>42B, மத்திய வீதி,<br>உவர்மலை,<br>திருக்கோணமலை. |
| அட்டை வடிவம் | : | உதயன் பிரின்டர்ஸ் |
| அச்சிட்டோர் | : | உதயன் பிரின்டர்ஸ்<br>39, அருணகிரி வீதி,<br>திருக்கோணமலை.<br>026-2220783 |
| விலை | : | 60/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக்குணம்


பொதுசன நூலகம்
26 MAY 2008
யாழ்ப்பாணம்







பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சமர்ப்பணம் | I |
| ஆசிச்செய்தி | III |
| வாழ்த்துரை | IV |
| கருத்துரை | V |
| என் அகழ்வு | VII |
| அன்பு | 01 |
| அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் | 03 |
| அன்னையின் அருள் | 05 |
| ஒழுக்கமும் உயிரும் | 07 |
| இளமையில் கல்வி சிலையில் எழுத்து | 09 |
| ஞானக்குழந்தை | 11 |
| ஔவையார் ஆற்றிய பணிகள் | 14 |
| நான் விரும்பும் புலவர் | 18 |
| நல்ல நட்பு | 20 |
| வாழ்க்கைக்கேற்ற கல்வி முறை | 23 |
| **பிற்சேர்க்கைகள்** | |
| உலகில் அரியது | 27 |
| மனித நேய சுயசிந்தனை | 29 |
| குருத்துவமும் மருத்துவமும் | 31 |
| அம்பாளின் மறக்கருணை | 33 |


171

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## கல்வி அறிவு தந்த நல்லாசான்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நிமிர்ந்த நன்னடையும் நிகரில்லாத்திறமையும் நேர்கொண்ட பார்வையும் தளர்விலாத தன்னடக்கமும் கொண்டவர் எம் அதிபர் அவரின் ஒரு சுற்றுப் பார்வையிலே சுற்றுமுற்றும் இலட்சணமாய் நிமிர்ந்து நிற்கும், உயரும் நிலையும், ஓங்கும் வகையில் இயங்கி நின்று ஒளிரும் எமது பாடசாலை இந்த வித்தகத் திறனெல்லாம் வியப்புடன் சிறந்திடும் எமது கல்விக்கூட அதிபதிதான் மதிக்கு (சூரியபுத்தி) ஆபரணமாய் அமைந்த செல்வி. மதியாபரணம். நிர்வாக நேர்மையொடு, சரித்திரம் (சுற்றாடல்க்கல்வி) சமயமும் (கிறீஸ்தவம் றோ.க. அல்லாதது) சலிப்பின்றி பொழிப்புடனே புரியப் புகட்டிடுவார். துளைத்திடும் கேள்விக் கணைகளுக்கு துடிப்புடன் பதில் கூறினால் தட்டிக் கொடுத்து வளமுற வாழ்த்துக் கூறி மகிழ்வார்.

மண் அடங்க பெண்புகழும் விண்புகழும் மாசறப்பெற்று
கண் நிறைய பொறுமையெனும் பொன் அணிபூண்ட பெண்ணாவார்.

வண்டமிழை செந்தமிழாக தேன் சொட்டச் சொட்ட ஆறாம் வகுப்பிலும், ஏழாம் வகுப்பிலும் அள்ளி ஊட்டியவர் செல்வி. கார்த்திகேசு. அவரின் அசைவும் விரிவுரையை அப்படியே பருகிடலாம். இன்றும் என்நெஞ்சம் விட்டகலவில்லை, அவர் கற்பித்தவை, இசைந்து மிகைபடவே எட்டாம் வகுப்பில் இன் தமிழ் தந்தவரை இன்னும் என்மனதில் நினைவில் எட்டவில்லை. ஒன்பதாம் பத்தாம் வகுப்பிலன்றோ திருமதி. மீனாட்சி எதிர்மன்னசிங்கம் (மீனாட்சி அக்கா) எம் அனைவருக்கும் அக்கா (நித்திரைத்தூக்கம்) குடிகொண்டு விடாமல் பொருந்தநிற்கும் கருத்துடனே கம்பராமாயணமும், கட்டுரையும், மெட்டுரையும், மென்சொல்லால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகைபடவே புரிய வைப்பார். மீனாட்சி அக்காவின் ஆச்சியுடன் பாசிபடராது பதிந்திடும் மாசில்லாத பாடங்களும், பாடசாலைப் பதிவுகளும். கல்வி கேள்விகளைச் சிறப்புடனே தந்த என் குருவர்த்தினி கட்கும் இவர்களின் வரவு இல்லாதநாளில் அவசியம் எனக் கருதி இசைந்து, இசைபடப் பாடம் கற்பித்தவர்கள். பண்டிதர் சண்முகநாதன், பண்டிதர். நவரத்தினம் ஆகியோருக்கும் அத்தோடு எண்ணுடன் எழுத்தும் பண்ணுடன் பரதமும் தெளிவுற விஞ்ஞானமும் மனிதவள மேம்பாடும் புண்ணியமும் கண்ணியமும் புனிதமுள்ள ஒழுக்க நெறிகளும் வருத்தியும் வழப்படுத்தி. கசடற மொழியும் கல்விச்சாலை தான் எம் "மகளிர் உயர்நிலைப் பாடசாலை" பண்டத்தரிப்பு.

எனது முதல்நூலை எனது பெற்றோருக்குச் சமர்ப்பணம் செய்தேன். பாடசாலைப் பிள்ளைகட்குரிய இரண்டாவது நூலான இந்த "பிள்ளைக்குணம்" என்னும் விருந்து எனது கல்விதந்த கல்விக் கூடத்திற்கும், குருதட்சணைக்கும் ஞாபகச்சின்னமாக இந்நூலை சமர்ப்பணமாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியர்

## திரு. பொ. கந்தையா (காந்தி ஐயா)

அவர்களின்

# ஆசிச்செய்தி

சமுதாயம் அமைதி கெட்டும்,
பாரம்பரிய விழுமியங்கள் கெட்டும்,
பிள்ளைகளும் கீழ்ப்படிவு குறைந்தும்
தன்னிலையுணராத தான்தோன்றித்
தனத்தால் சமூகவிழுமியங்கள் சிதைந்து
போகும் இக்கட்டானதொரு காலம்.
அப்படியானதொரு காலகட்டத்தில் இந்த
''பிள்ளைக்குணம்'' என்ற நூலை திருமதி.
சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் அன்பு, ஒழுக்கம்,
நல்லநட்பு என்ற நன்நெறி உணர்த்தும் இன்னும் பல
அத்தியாயங்களோடும் சுயசிந்தனை என்ற இன்றைய கால
கட்டத்திற்கமைந்த ஒரு தொகுப்போடும் அரிதான மானிடத்தை
அரிதான ஆன்ற அரும்பொருளுரையை பிள்ளைகள் கற்றுணர
வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனையோடு, எழுதி வெளியிடுவதை
எண்ணி பெருமனத்தோடு இந்தப் பெரும்பணி மேலும்வளர
வாழ்த்துகின்றேன்.

இவர் நற்பணியும் நற்சிந்தனையும் கல்வி
உலகத்திற் பயன்பட வேண்டும் என்வும்
ஆசிகூறி அமைகின்றேன்.

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்

முத்துக்குமாரசுவாமி கோயிலடி,
திருக்கோணமலை.
21-09-2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் சைவப் புலவர். அருளம்பலம் குகராஜா அவர்களின்

# வாழ்த்துரை

திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் அவர்களால் ஆக்கப்பெற்ற இரண்டாவது படைப்பான "பிள்ளைக்குணம்" என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது கனிந்த இறைபக்தியை இவரது முதலாவது கவிதை நூலான "அன்னைக்கு என் உள்ளக்கமலம்" மூலம் தெரிந்து கொண்டேன். அவரது பேச்சும் நடத்தையும் அவரை பழுத்த ஆன்மீகவாதியாக எம்முன்னே காட்டி நிற்பதை எவரும் மறுக்க முடியாது.

தற்போது நல்லபல விழுமியக் கருத்துகள் பெரியவர்கள் மத்தியில் அருகி வருவதைக்கண்ட நூலாசிரியருக்கு இன்றைய குழந்தைகளின் எதிர்கால வாழ்வு எப்படி அமையப் போகிறதோ என்னும் கேள்வி மனதைக் குடைந்திருக்கிறது. அதனுடைய வெளிப்பாடே "பிள்ளைக்குணம்" என்னும் இந்நூலாகும்.

இந்நூல் குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என நினைக்கிறேன் ஏனெனில் குழந்தைகள் உள்ளங்களில் படித்ததும் பதியக்கூடிய வகையில் பத்துவிடயங்கள் மிகவும் தெளிவாகப் புகுத்தப்பட்டுள்ளன. பெறுமதிமிக்க பிற்சேர்க்கைகளும் காணப்படுகின்றன.

நூலாசிரியரது சிந்தனை வெளிப்பாடுகள் பாராட்டுதற்குரியன. தமிழறிவு மிக்க நூலாசிரியர் இன்னும்பல நூல்களை வழங்கவேண்டுமென விரும்புவதோடு பிள்ளைக்குணம் என்னும் நூல் குழந்தைகள் வாழ்வை வளப்படுத்தட்டும் என வாழ்த்துகின்றேன்.

**அருளம்பலம் குகராஜா**
பொதுச் செயலாளர்
கொ. இ. அ. ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் (தமிழ்மொழி)
## திருமதி. சித்திதேவி பத்மநாதன்
### அவர்களின்

# கருத்துரை

திருமதி. சரோஜினிதேவி சிவஞானம் அவர்களின் கட்டுரை ஆக்கங்கள் பத்தும் மனிதநேய சுயசிந்தனை ஆக்கங்களின் தொகுப்பு நான்கு அடங்கியதாய் அவை நூாலுருப்பெற்று, திருமதி. சரோஜினிதேவி அவர்களின் மனோபீஷ்டம் நிறைபெறவேண்டும் எனும் விருப்போடு, எனது கருத்துரையை முன் வைக்கிறேன்.

குழந்தை வளர்ப்பில் தன் முழுவாழ்வையும் நிறைவு செய்து நிற்கும் அம்மையார். தமது குழந்தைகளின் கல்வித்தேவை கருதி எழுதிய ஆக்கங்களே இவற்றில் பெரும்பாலானவை "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனநினைத்தே தன்குழந்தைகள் பெற்ற அறிவினை ஏனைய குழந்தைகளும் பெற்றிடும் நோக்கில் இத்தொகுப்பை சிறுவர்க்குரியதென்றே நிர்ணயித்து "பிள்ளைக்குணம்" எனும் பெயரில் தொகுத்துள்ள அன்னவர் முயற்சி வரவேற்கத்தக்கதாகும்.

அவர் அமைத்த கட்டுரைகளுள் ஆழ்ந்து நோக்குவோமானால் அன்பு, அன்னை, தந்தை, ஒழுக்கம், கல்வி என்பவற்றின் பெருமைதனை சிறுவர் மனதில் ஆழ்த்திப் பதித்திடும் முயற்சியைக் காணலாம். ஔவையும், வள்ளுவரும், நக்கீரரும், ஞானசம்பந்தரும் உள்ளத்தில் உயர்ந்த இடத்தில் அமர்த்தப்பட வேண்டியவர் எனும் உறுதியுரையைக் காணலாம். சேவையில் உயரிடம் வகிக்கும் வைத்தியரும், ஆசிரியரும், போற்றிப் புகழ்ந்துரைக்கப்படும் பான்மை காணலாம்.

எக்கருத்தையும் செய்யுமுன் நாம் பணிந்து வணங்கிடும் தெய்வம் அந்த விநாயகப் பெருமான் அந்த ஞானமுதல்வன் நமக்குணாத்திய பேருண்மையே



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பது மாங்கனி கொண்டு ஈசன் நடாத்திய திருவிளையாடல் ஒன்று உலகமே அன்னை தந்தை என்று உலகுக்குணர்த்திய தத்துவக் கதையாகும். இதனை மிக அழகுற எழுத்தாண்டுள்ளார் திருமதி. அம்மையார்.

இன்றைய காலத்தின் தேவை கருதி இத்தகைய கருத்துத் தொகுதியை வெளியிட முன்வந்த அவர் நன்நோக்குப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அன்றாடம் நாம் கேட்கும், படித்தும் வரும் அறக்கருத்துகளே இதில் இடம்பிடித்துள்ளன ஆயினும், அதனைப் பலகாலும் படித்துப் படித்துத்தான் மனப்பதிவு பெற வேண்டும் இந்நூலை இளையோர் கற்றிட வேண்டும்.

கற்றபடி, நிற்கப் பயின்றிட வேண்டும். இதனையாத்த திருமதி. சரோஜினிதேவியவர்களின் திறனை அவர் ''அன்னைக்கு என் உள்ளக் கமலம்'' என்ற கவிதை நூலில் கண்டு கொண்டேன் அவரது தெய்வபக்தி, தமிழறிவு, ஞானம் இவைகட்கு அந்த நூலே சான்றென்பேன்.

> மனப்பதம் தந்தாள் மனத்தில் இருத்தினாள் என்னை
> தனக்கனமன்று தண்கருணைத் தயவுதந்தாள் அன்னை
> போற்றினோம் புகழ்ந்தோம் ஆற்றினோம் அன்னையே
> அன்னையே என்று
> சாற்றினோம் சூட்டினோம் சுடர்ஒளியை அகம் நிறைந்து நின்று

திருமதி. சரோஜினிதேவி அவர்களின் இந்த நன்முயற்சி. அவர் மனம் போல் சிறார்கள் மனத்தகத்து ஒளி ஏற்றிட வாழ்த்தி நிறைகிறேன்.

**திருமதி. சித்திதேவி பத்மநாதன்**
''அன்பு இல்லம்''
திருக்கோணமமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அகவுரை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

தும்பிக்கையான் துணையோடு வாக்கு வன்மை உண்டாக மாமலராள் அருளை வேண்டியவண்ணம் இதனை நூலக அகழ்ந்து ஒரு ஆற்றுகையாக எழுதி வெளியிட முற்பட்டேன். இஃதை நுலாக்க ஊக்குவித்து உதவிகளும் புரிந்தவர்கள் தி/மா.இ இ. பேரவையினர். எனது பிள்ளைகள் பாடசாலைப் பருவமுடையவர்களாக இருந்த போதும், எமது அயலிலுள்ள உறவுமுறைப் பிள்ளைகள் பாடசாலைப் பருவமுடையவர்களாக இருந்தபோதும் 1977ம் ஆண்டிலிருந்து 1994 ம் ஆண்டு வரை பாடசாலை மட்டத்திலும்/மாவட்ட மட்டத்திலும் நடந்த பேச்சுப்போட்டிக்காக எழுதப்பட்டு பரிசுகள் பெற்று இன்று வரை பாதுகாத்து வைக்கப்பட்ட விடயங்களே இவைகள்.

இவற்றை அனைத்து மாணவச் செல்வங்களும் மேன்மையுறக் கற்பதற்காக இந்தக் கல்வி என்னும் சோலைக்குள் கலைப்பூங்கொத்தாக மலர்ந்து மணம் கமழும் மதிநுட்பத்தை ஆய்வரங்கமாக்கக் கூடியதாக இந்நூல் அமையும் என நம்புகின்றேன். இது விளையாட்டாகவும், வளரும் பயிரின் விதையாகவும் துள்ளித்திரிந்து கற்கக்கூடிய ஒரு நூல் "பிள்ளைக்குணம்" பிள்ளைகள் பண்பட வளரவேண்டும் எப்படி எனின் கல்வி நிரம்பிய பொக்கிசங்களாக நீதியகங்களாக "கல்வியே கண்", "கல்வியே ஒளி" என்ற வகையில் வளர்க்கப்பட வேண்டும். அத்தோடு பெற்றோருக்கும் குருவும், தெய்வம் என்ற அருளோடு உணர்ந்து பிள்ளைகளின் உயர்வு அமைய வேண்டும் என்பதும் என் அவா.

அன்பு, "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" "ஒழுக்கமே உயிர்" "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" நல்ல நட்பு போன்ற விடயங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கையாக ''மனித நேய சுயசிந்தனை'' ''அரிது அரிது'' ''மானிடராதல்'' ''குருத்துவமும் மருத்துவமும்'' அம்பாளின் மறக்கருணையின் வாயிலாக பெற்றோரின் கண்டிப்பும் கருணையும் என்ற நான் படித்த விடயங்கள் மனதில் உற்றுணர்ந்தவைகளையும் பிற்சேர்க்கைகளாக சேர்த்துள்ளேன். ஒரு நூாலுக்கு மிகவும் சிறப்புத்தருவது அதன் பிற்சேர்க்கைகளே. பிள்ளைகள் அன்பு, கருணை இரக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். கெடுதி விளைவிப்பவைகளான துஷ்ட நட்பு துன்பகரமான சக பாடிகளிடம் சிக்கித் தவறக்கூடாது என்ற அன்பு உணர்வையை ''பிள்ளைக்குணம்'' பகர்கின்றது. இந்தப் படிப்பனையாக சேர்த்த விடயங்களை பெற்றோரும் மாணவரும் அவசியமென கருதி வாசித்துப்பயனடைவார்கள் என்று எண்ணிப் பிரார்த்திக்கின்றேன்.

அத்தோடு ''மாசில்லாத மனமுள்ளவர்கள் பிள்ளைகள்'' குழந்தைகளின் உள்ளம் கள்ளமில்லாதது பெரியவர்களாக ஆகத்தான் வஞ்சகம், குரோதம், மோகம், பொறாமை போன்ற துர்க்குணங்களுக்கு ஆளாகிறார்கள். கள்ளமில்லாத குழந்தைகள் சூழலாலும், துர்நடத்தை கூட்டுகளாலும் கெட்டுவிடாது ''மனத்தின் கண் மாசினை'' வளர விடாது தடுத்து வழி காப்பது எம் கடனே. இன்றைய சிறுவர்கள் இனிவரும் காலத்திலும் மனம் போன போக்குப்படி வளரக்கூடாது என்ற ஆழ்ந்த சிந்தனையில் நான் மிகவும் மனம் நொந்து போயுள்ளேன்.

குடி, குடிபோதை, கொலை, கொள்ளை, மனமயக்கம் என்பவற்றிற் கெல்லாம் பிள்ளைகள் ஆளாகிறார்கள். பிள்ளைகளையே நம்பியிருக்கும் பெற்றோர் மனக்குடைசலாலும், துன்பத்தாலும் வேதனைப்படுகிறார்கள். எங்கு பார்த்தாலும் குண்டு மாரி ஓலம் அவலம் அழுகுரல் இழப்புக்கள் ஆரவாரம், ஓட்டம் எல்லாம் மலிந்து மனிதனை மனிதன் அழிக்கும் தன்மையே மேலோங்கி நிற்கிறது. இந்த நிலை மாறவேண்டும். எப்படியென்றால் கல்வி, மன அடக்கம், கீழ்ப்படிவு, தெய்வநம்பிக்கை, வழிபாடு என்ற நன்நெறியும், நல்வழியும் சிறந்து பக்திநெறி பரவ தெய்வ மணம் கமழ பிள்ளைகள் நம்பிக்கையூட்டி வளர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
KOHA JPL

இப்படிப்பட்ட எண்ணக்கருவூலமெல்லாம் நூல்வடிவாக வரவேண்டும் என்று வரவேற்றவர் எனது முதல் நூலான "அன்னைக்கு என் உள்ளக் கமலம்" என்ற நூலை வெளியீடு செய்துவைத்த தி/ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஐயா அவர்களும் திரு. பொ. கந்தையா (காந்தி ஐயா) அவர்களும் வாழ்த்துச்செய்தி வழங்கியுள்ளார்கள். பல அறிவுரைகளையும் எனக்கு என் தந்தை உருவில் இருந்து தந்தார்கள். கொட்டியாரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுச்செயலாளர், சைவப்புலவர் திரு. அ. குகராஜா அவர்களும் வாழ்த்துச்செய்தி தந்ததோடு என்னை ஊக்குவித்தார்கள். முன்னாள் ஆசிரிய ஆலோசகர் தமிழ் மொழி திருமதி. சித்திதேவி பத்மநாதன் அவர்கள் என் அன்னை வடிவில் இருந்து கருத்துரை வழங்கியுள்ளார்கள். சைவப்புலவர் கலாபூஷணம் திரு. அ. பரசுராமன் அவர்கள் இந்தப் புத்தகத்தில் வரும் ஒவ்வொரு அத்தியாயத்தையும் பிற்சேர்க்கைகளையும் பொறுமையுடன் சரி பார்த்து சிறியவர்களுக்குரிய வசனநடை எப்படி அமைய வேண்டுமென்றும் சில பாடங்களுக்குரிய தலைப்புக்களையும் மாற்றியமைத்து இந்நூலுக்கு ஆலோசனைகளையும் கூறி ஒருங்கமைத்துத் தந்தார்கள் என்றே தான் கூற வேண்டும்.

வழமைபோல மிகவும் தெளிந்த மனத்தோடு என்னை உற்சாகப்படுத்தி நூல் உருவாகும் வரை வண்ணமாக அறிவுரை கூறிய கலாபூஷணம், கலாவித்தகர் திரு. தாபி. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் இவர் பல தேர்வுகளை வென்ற நல்லாசானுமாவார். எனக்கும் பத்திரகாளித் தாயாரின் அருளினால் என் பிற்காலத்தில் கிடைத்த நல்லாசானும் அவரேதான்.

மேலும் மிகவும் சிறப்புற குறுகிய காலத்தில் அச்சேற்றியும் அழகிய அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த உதயன் அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் நான் சிரம் தாழ்த்தி நன்றிகூற கடமைப்பட்டவள். இதனை வெளியீடு செய்ய முழு ஒத்துழைப்பும் வழங்கி கண்ணயராது உதவிய என் கணவருக்கும், எனக்கு சகோதரர்போல என்றும் உதவிபுரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலம்பேணாத தொண்டர் திரு. ந. செல்வஜோதி அவர்கட்கும் என் நன்றி இத்தனையையும் எழுத்துருவாக்கி வெளியிடமிகுந்த கல்வி கேள்விகளில் சிறந்த அறிவாளியல்ல. என் சிற்றறிவுச் சிந்தனையில் "கல்வியறிவை கசடற ஊட்டியவர்களுக்கு" என் நன்றி என்றென்றும் உரித்தாகட்டும்.

பிள்ளைச் செல்வங்களே, பிள்ளைகளுடைய அருமைப் பெற்றோரே நம்முடைய வெற்றி தோல்விக்கு நாமே பொறுப்பு, பிறரோ, சூழ்நிலையோ அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொண்டு விதை முளைத்து செடியாகி செடி பின்பு மரமாகி எத்தனையோ விதையை உலகிற்கு கொடுக்கிறது. அதே போல எமது வெற்றியின் ஒளி உள்ளும், புறமும் மணம் வீச வரம்பு மீறாமல் வளரவும் வாழவும் பழகிக்கொள்ள வேண்டும் பரந்து பட்ட அறிவையும், பகுத்தறியும் சிந்தனையையும் இறைவனையும் துணைகொண்டால் யாரும் எம்மை ஆப்பு இழுத்துவிடமாட்டார்கள். கனிந்த வார்த்தை ஜலங்களில்கூட பின்னுக்கு குப்பையே மலிந்திருக்குமாம். என்றே விபுலானந்தரும் கூறினார். இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகள் வாழ்வு மிக மிக கவனத்திற்குரியதாகப் பேணப்பட வேண்டும். என்பதை பிள்ளைகளும் உணர்ந்து வரம்பு போட்ட வழிக்குள் வழிக்கி வீழ்ந்துவிடாமல். பார்த்துக் கொள்ள வேண்டும். அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கங்கள்.

சுபம்

இவ்வண்ணம்

**திருமதி. சரோஜினிதேவி சிவஞானம்**

"தேவி கடாட்சம்",
42, தேன் தமிழ் வீதி,
உவர்மலை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு



அன்பு எல்லா உயிர்களுக்கும் வேண்டப்படுவது. அஃறிணை உயிர்கள் எல்லாம், மனித இனமும் அன்பையே முதற்களஞ்சியமாக, எதிர்பார்க்கின்றன. சைவ மதமும், புத்த மதமும், கிறிஸ்தவ மதமும், இஸ்லாமிய மதமும், உலகம் இயங்குவதற்கும் உலக உயிரினங்கள் வாழ்வதற்கும் மூலாதாரமும், அச்சாணியும் அன்புதான் என்றே வலியுறுத்துகின்றன. நாம் படிப்பதற்கு ஆரம்பிக்கும் போது “அ” என்ற எழுத்துடனேயே ஆரம்பிக்கிறோம். “அ” முதலாவது உயிர் எழுத்து. இந்த “அ” என்பது அன்பு, அருள், அன்னை, அழகு, அறிவு, அறம், அடக்கம், அகம் அனைத்திற்குமே முதல் எழுத்தாக இருக்கிறது. எழுத்துக்களுக்கு மூலம் “அகரம்” உயிர்களுக்கு மூலம் அன்பு. எல்லா உயிர்களும், இறைவனும் கூட அன்பிற்கே வயப்படுபவர்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது.

அன்பு. தாயன்பு, இறையன்பு, குரு அன்பு, சகோதரபாசம் உறவினரிடத்தில் ஏற்படும் பாசம் என்றும், இன்னும் பலதரப்பட்டு இவ்வுலகில் பரந்து விரிந்து செல்கிறது. இதில் தாயன்பு தன்னிகரில்லாதது. “தாய்” எனப்படுபவள் இதயத்தோடும், இரத்தத்தோடும், நரம்போடும், உணர்வோடும் உறைந்து ஊறிய ஒரு ஊற்று. உதிரத்தையே பாலாக வடித்து ஊட்டுபவள் “எம் அன்னை” இறைவனையே கண்ணால் கண்டதுபோல உள்ளதுவும், பெறுமதிமிக்கதுவுமே தாய் தந்தை பாசம், இந்த தாய் தந்தை பாசத்திற்கு ஈடானது வேறெதுவும் இல்லை.

நித்தமும் பாலூட்டி அனுதினமும் சோறூட்டி, பாலுடன் சேர்த்து பக்குவங்கள் தனையூட்டி, வீரம் செறிந்த வித்தகத்திறனூட்டி தத்துவ நிலையைத் தானும் கலந்தூட்டுபவள் “தாய்” எம் வாழ்வைப் பண்படுத்தி, செழிப்புற, செம்மையுற, நல்லோராக வல்லோராக வாழ வைக்கவும், என்றும் அரும்பாடுபடவும் என்றே உலகில் இறைவனைப் போல் வந்த அன்பே தாயன்பு. இது மாறாத உண்மையாகும்.

ஒரு பிள்ளை வளர்ந்து வரும்போது நண்பன், நண்பிகளை கண்டுபிடித்து நல்ல நண்பர்களோடு நட்பு செய்து அன்பு கொள்வதும் மிகமிக அவசியமானது. நட்பு உள்அன்போடு கூடிய துயர் துடைக்கும் துன்பம் அகற்றும் நட்பாக இருக்க வேண்டும். கூடிப்பழகி கெடுப்பவர்களாக கெட்டுப் போகும் பழக்க வழக்கங்களுக்கு ஆளாக்குபவர்களாக நண்பர்கள் அமைந்து விடாதபடி பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமானது. இதையே எல்லா சமயத்தவரர்களும் ஏற்கக்கூடிய திருக்குறள் என்னும் நூலில் திருவள்ளுவர் இவ்வாறு நட்பின் தன்மையைப் பற்றி கூறுகிறார்.

“உடுக்கை இழந்தவன் கைபோல் - ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”. (தி.கு. 8 நட்பு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உடுப்பு இடுப்பிலிருந்து அவிழ்ந்தால் கைதானாகவே யாரும் சொல்லாமலே போய் அத்த ஆடையை சரிசெய்கிறது. அதே போல நண்பனுக்குத் துன்பம் வரும்போது யாரும் சொல்லாமலே ஓடிப்போய் உதவி செய்பவனே உண்மை அன்பு உள்ள நண்பன். அத்தோடு கூடவே உண்மை அன்பை திருவள்ளுவர் எப்படிக் கூறுகிறார். பாருங்கள்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃது இலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு". (தி.கு. அன்புடமை 10)

அன்பு செய்யத் தெரிந்த உயிர், உள்ளம் இரண்டும் உடைய உடம்பே உயிருள்ள உடம்பு. அன்பில்லாதார் உயிர் எலும்பாலும் தோலாலும் போர்த்த கூடு. என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

அஃறினை உயிர்கள் என்று சொல்லப்படுபவை கண் காது, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐந்தறிவுமட்டுமே உடையன, மனிதன் மட்டும் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவைப் பெற்றுள்ளான். ஆகவே நல்லதை நினைத்து, நல்லனவற்றைச் செய்து செம்மையுற, பெருமையுற, மேன்மையுற பகுத்தறிந்து வாழ வேண்டும். எல்லோரிடத்திலும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இறைவனை! தொழ, பூசை செய்ய, பூமாலை கட்ட, பாட வாழ்த்த, நல்லவழியில் தானம், தவம் செய்து நல்நிலையில் நன்நெறியில் வாழவே இறைவன் எம்மை நன்கு படைத்துள்ளான். நாம் அன்பாக இருக்கப் பழகியே மற்றையோரிடத்தில் அன்பைப் பெறவேண்டும். நல்ல "செம்மையுள்ள அன்பான வழியில்" நடக்க பிள்ளைப்பருவமே சிறந்த பருவம். அன்பை விட ஆழமானது இவ்வுலகில் எதுவுமில்லை என்பதை என்றும் எம் உள்ளம் நிறைய உணரவேண்டும்.

இயேசுக்கிறிஸ்த்து ஒரு கண்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் அறையக்கொடு என்கிறார். திருப்பி அடியாதே என்பது தான் அவர் அன்பு மிகுதியால் கூறுவது. கௌதமபுத்தர் உலகில் துன்பங்களை அன்பால் மீட்பதற்கென்றே பெரும்செல்வம், மனைவி, மகன் எல்லாம் விட்டெறிந்து துறவியானார். முகம்மதுநபி நேர்வழியில் அன்பாக நட அதே உனக்கு தெய்வம் என்று வலியுறுத்துகின்றார். எல்லா மதங்களும் பூரண அன்பையே எடுத்துக் கூறுகின்றன.


சைவமதம் "அன்பே சிவம்" "சிவமே அன்பு" என்று வலியுறுத்துகின்றது. திருமூலநாயனார் அன்பாலே கட்டுண்டே இதைக் கூறினார். நால்வர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் இவர்களுள் அழுது அழுது அன்பாலே இணைந்து திருவாசகத்தை மாணிக்கவாசக சுவாமிகள் தான் கொண்ட கடும் பக்தியாலும் அன்பாலும் சிவபெருமான் மீது பாடியுள்ளார். இதனை கண்ணீர் மல்க கனிந்து நாமும் ஓத வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்



விநாயகர் தனக்குமேல் ஒருவரும் இல்லாதவர் என்பதை சைவ சமயம் எடுத்துக்கூறுகின்ற உண்மையாகும். வேதாகமங்களும் அப்படித்தான் கூறுகின்றன. ஆகையால் நாம் ஒரு கருமத்தைத் தொடங்கும் போது விநாயகரை முதலாக எண்ணி விநாயகரை முன்வைத்தே தொடங்குகின்றோம். இப்படி முதல்நிலையிலுள்ள விநாயகரையே உலகைச்சுற்றிவா என்று அவரது அன்னையும் பிதாவும் பணித்தபோது அன்னையும் பிதாவுமே உலகம் என்று உலகமாதாவாகிய உமையையும், உமாபதியையுமே சுற்றிவந்து உலகம் உய்ய ஆன்மாக்கள் உய்வுபெற அன்னையையும் தந்தையுமே முதன்மைப் படுத்தி வழிகாட்டினார் விநாயகர்.

உலகில் உயிர்கள் உய்ய வேண்டுமானால் அன்னை வேண்டும். நாம் உய்ய வேண்டுமானால் நமக்கும் அன்னை வேண்டும் அன்னையின்றி இப்பூமியில் எவ்வுயிரும் பிறந்ததில்லை. இதனால்தான் அகரவரிசையிலே ஒளவைப்பாட்டி நமக்கு "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்று பாடிக்காட்டினார். தாயை வழிநடத்தும், அச்சாணி தந்தையே! தந்தையின் உணர்வும், உள்ளமுமாய் சிந்தனையில் சிதையாது என்றும் விளங்குவது எம்முடைய உயர்வே என்பதை எம்மனத்துள் இருத்துவோமாக.

குழந்தைகளாகிய எமது பசி, தாகம், ஆசை எல்லாம் தணிய வைக்கும் எம் தாயும் தந்தையும் எமது படிப்பிலும், பழக்கவழங்கங்களிலும், உயர்விலும் ஒழுக்கத்திலும் வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் வாழவைக்க அரும்பாடுபடுகிறார்கள். ஆகையால் எமக்கும் உலகம் எமது தாய் தந்தையரே! என்று எண்ணி வளர்வோமாக தாய்தந்தையரை மறவாமல், தாய் தந்தையர் எமக்காக எடுக்கும் அரும்பெரும் முயற்சிகளையும், அக்கறையையும் தட்டாமல் நடக்க முதலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி நடக்க அறிந்து வளர்ந்து வந்தால் நாமும் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களென்பது தெற்றென விளங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா மொழிதந்த புலவர் திருவள்ளுவர் கூட தான் இயற்றிய முதலாவது அதிகாரம், முதலாவது குறளிலே கடவுள் வாழ்த்தில் தனது தந்தையையும் தாயையுமே முதன்மையாகவும் முதலாவதாகவும் கூறியுள்ளார்.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு" (தி.கு. கடவுள் வாழ்த்து 1)

அதற்கேற்ப ஔவையாரின் பொன் மொழியிலும் அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் (கொ.வே. 1) என்று இறைவன் அருளால் தந்தையையும் தாயையும் கண்கண்ட தெய்வம் என கூறிப்பிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எழுத்துக்களுக்கு "அ" என்ற எழுத்தே முதலாவதாக உடையது. அதே போலே ஆதியும் பகவனுமே உலகிற்கு முதலாவதாக உடையவர்கள் என்பதை இந்த அறநூல் கூறி நிற்கின்றது. எமக்கு ஆதார தெய்வங்கள் எமது பெற்றோரே.

மேலும் கவிக்குயில் பாரதியார் கூறுவதையும் நினைத்துப்பார்ப்போம். பதித்துக்கொள்வோம் எம் மனதில்

வேண்டியன கொடுத்திடுவாள் அவை
விரும்பு முன்னே கொடுத்திடுவாள் - அம்மை
உயிரெனும் முலையிலே உணர்வெனும் பாலூட்டி
அண்ணன் அர்ச்சுணன் போலென்னை ஆக்கிடுவாள்

ஆம் இத்தனை ஆற்றலும் ஆக்கமும் தரும் அன்னையையும் பிதாவையும் என்றென்றும் மறவாமல் போற்றுவோமாக. உலக நெறி வளர்த்த உத்தமர்கள் அனைவரும் எமக்குக் கூறி வைத்த கூற்று இது.

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை"
தந்தைசொல்மிக்க மந்திரமில்லை
(ஔவையாரின் கொன்றை வேந்தன் 37-38)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னையின் அருள்



எம்மை இவ்வுலகில் பெற்றெடுத்தவளும் ஒரு அன்னையே. இந்த உலகத்தைக் காப்பவளும் மாபெரும் சக்தியான அந்த மகா சக்தி அன்னை பராசக்தியே. எமது மூச்சும், பேச்சும், வாழ்வும் வளமும், சீரும் சிறப்பும், எண்ணும், எழுத்தும், ஆக்கச் செயல்களும், அன்னை பராசக்தி தந்த அருளேயாகும். அண்டமெல்லாம் பூத்திருந்து, பூமியையும் பதினான்கு லோகங்களையும் அடங்கிட காப்பவளும் அன்னையே என்று அபிராமிப் பட்டரும் போற்றிப் புகழ்ந்து பாடுகிறார் அபிராமி அந்தாதியில் பட்டர் பெருமானுக்கு அமாவாசையில் வரும் கரு இருட்டில் பௌர்ணமி நிலவை (பூரணை) காட்டி தன்மேல் மனமுருகி நூறுபாடல்கள் ஓரேதடவையில் பாட அருள் கொடுத்தவளும் அந்த அன்னையேதான். தேவியவள் தீர்க்காத துன்பமில்லை. உலகில் அன்புள்ளம் கொண்ட அடியவர்கள் எந்த வகையில் கொடுமைகளைக் கஷ்டங்களை அனுபவித்தாலும் அம்பாள் எந்த வடிவு எடுத்தும் வந்து காத்து அருளுவாள்.

எட்டு லஷ்மியாக, (அட்டலக்சுமி) நவசக்தியாக, சாமுண்டீஸ்வரியாக வந்து எம்மை எல்லாம் காத்து நிற்கின்றாள். அதனால்தான் அம்பாளுக்கு நாம் 9 நாள்கள் விழா எடுக்கின்றோம். மகிடாசூரனால் மக்கள் படும் துயரத்தையும், கொடுமைகளையும் துடைக்க எண்ணிய அகிலலோக நாயகி வீரம் தரும் பராசக்தியாக முதல் மூன்று நாள்களும், சிங்காசனத்தில் வீற்றிருந்து பின்பு செல்வம் தரும் இலக்குமியாக அடுத்த மூன்று நாள்களும், செந்தாமரையில் வீற்றிருந்து, அதன்பின்பு இறுதி மூன்று நாள்களும் சரஸ்வதியாக கல்விதரும் தெய்வமாக வெண்டாமரையில் வீற்றிருந்து இறுதி பத்தாம் நாள் மகிடாசூரனை அழித்து கொடுமைகளையும் கொடியவனையும் இல்லாமல் செய்து மக்களையும் நல்லவர்களையும் காத்த வெற்றி நாளே விஜயதசமி ஆகும்.

இந்த வெற்றி நாளை கொடியவனை வெட்டி வீழ்த்தியதாகக் கருதி கோயில்களில் வாழைமரத்தை வெட்டி வீழ்த்தி விடுவதைக் காண்கின்றோம். நாமும் எம்முள் இருக்கும் பொறாமை, அறியாமை, கொடூர எண்ணங்களை, கொடுமைகளை மறந்தும் செய்யாது வெட்டிவிட்டு நல்ல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமுள்ளவர்களாக வளர்ந்து, முயன்றும் சாலவும் நன்றான செயல்களைச் செய்து அம்பாள் அருள் வேண்டி எந்நேரமும் துதிப்போம். எம்மை நல்ல ஒழுக்கத்தோடு பண்படுத்தினால் நல்ல மதிப்போடும், தெய்வ அருளோடும் பல வெற்றிகளை நாம் அடைய முடியும். என்றும் அன்னையின் அருள் வேண்டி விழா எடுக்கும் போது திடசங்கற்பம் செய்து கொண்டு அதன் வழி வாழ்வோமாக. பிள்ளைகளெல்லாம் புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகள் எழுதுகோல்கள் எல்லாவற்றையும் வைத்து பாடசாலைகளிலும், கல்விக் கூடங்களிலும், பஜனை மண்டபங்களிலும் வழிபடுவதும் பெறற்கரிய பேறான கல்விச் செல்வம் சரஸ்வதி அன்னையின் அருளால் கிடைப்பதற்கும் உயர்ச்சி பெறவும் என்றே இவ்வழிபாட்டினை உருக்கத் தோடு செய்கிறோம் என்பதை மறக்க முடியாது.

இப்படி முன்னொரு காலத்திலே பஞ்சபாண்டவர்கள் வெற்றியைப் பெறும் பொருட்டும்: கொடுமை செய்தவர்கள் அழிவதற்காகவும் (கௌரவர்கள்) தமது ஆயுதங்களை பூஜையில் வைத்து பூஜை செய்து அன்னையின் அருள் பெற்று வெற்றியும் பெற்றனர். தர்மவழிநின்று தர்மம் காத்தனர். கௌரவர்கள் அதர்மவழியில் தீமைகளைச் செய்தனர் அழிந்தே போனார்கள். அதர்மம் அழிந்தது, தர்மம் வென்றது.

துன்பமில்லை சோர்வில்லை தோல்வி இல்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட
நல்லது தீயது நாமறியோம் அன்னையே
நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!

நம்பித் தொழுவார்க்கு துன்பம் வராது தோல்வியும் வராது, எல்லாவிதமான தீமைகளையும் ஓடச்செய்து நல்லனவற்றை அன்னை எமக்கு விளங்க வைப்பாள் அன்பு நெறியில் அறநெறியில் துன்பம், சோர்வு, தோல்வி எல்லாம் நீக்கிடுவாள் "நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே" அன்னையின் அருள். மனம் தளராத கல்வியும் தந்து வாழ்வும் மலர்ந்து சிறப்படையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒழுக்கமும் உயிரும்



ஔவைப் பிராட்டியாரையும், திருவள்ளுவரையும் அறியாதார் யாருமே கிடையாது. இவர்கள் இருவருமே வளர்ந்து வரும் சிறார்களுக்கும், சமூகத்திலுள்ள அனைவோருக்கும் ஒழுக்கமே உயிர் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் 133 அதிகாரங்களில் "ஒழுக்கமுடமை" மிகமிகப் பிரதானமானது உயிரைவிடச் சிறந்தது. "ஒழுக்கமே, என்கிறார். அதனால்தான் ஒழுக்கம் பெருமை தரும். வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கும் என்றார் திருவள்ளுவர்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும். (ஒழுக்கமுடமை முதலாவது குறள்)
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும். (தி.கு.இல்வாழ்க்கை10)

நாம் வையத்துள் (உலகில்) புகழுடன் வாழ்வதற்கும் தெய்வத்தை அடைவதற்கும் வருந்தியும் மிகவும் ஆராய்ந்து பார்த்து துன்ப துயரங்கள் வந்துற்றபோதிலும், ஒழுக்கத்தினைக் காக்க வேண்டும். நற்பண்பினையும், நற்குணத்தையும், நாம் சுடுகாடு போகும்வரை காப்பாற்ற வேண்டும். உலகில் உயிரா, ஒழுக்கமா சிறந்தது என்று வாதாட முற்பட்டால் உயிரைப் பேணுவதை விட ஒழுக்கத்தை மிகவும் கவனத்தோடும் நிதானமாகவும் பேண வேண்டும். ஒழுக்கத்தை பேண முடியாத ஒருவனுக்குக் "கற்றதனால் கூடப்பயனில்லை" நாம் ஒழுக்கத்தை அழிவுபடாமல் பேண வேண்டும் இல்லையேல் முதலாவது நாம் பிறந்த குடும்பத்தை நாம் பிறந்த குலத்தைப் பழித்துரைப்பார்கள். குணமில்லாவிட்டால் இரண்டுமே பழித்துரைக்கப்படும் என்பதை நன்கு உணர வேண்டும்.

இதனால்தான் ஔவைப்பிராட்டியார் மிகவும் எளிதாக எடுத்துக் கூறினார் "தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை" என்று, அதுமட்டுமல்ல எம் குலத்தை, குணத்தை எப்படிக் கணிப்பீடு செய்கிறார் அன்றிருந்த நம் கிழவி, பாருங்கள்.

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்அறிவு - மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். (மூதுரை 7வது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் வளரும் அல்லி (ஆம்பல்) நீரின் உயரத்தளவே தான் இருக்கும். எமக்குள்ள கல்வி நாம் கற்ற (படித்த) பாடநூல்களவே இருக்கும். நாம் வாழும் செல்வ வாழ்வு முன்பு செய்த தவத்தளவே தான் எமக்கு அமையும். எம்குலத்தளவே தான் எம் குணமும் என்கிறார். பிள்ளைகளே எமது குலம், குணம் இரண்டும் பழித்துரைக்கப்படாமல் எம் குணத்தை நாம் காக்க வேண்டும்.

ஆகவே குணம் என்னும் குன்றில் ஏறி நின்று அறவழிகளைப் பேணி "கசடற கற்று" கற்றபடி ஒழுகுவோமாக. இன்னுமொன்று வளர்ந்து வரும் சிறார்களுக்கு கூறிவைக்க வேண்டும் அது என்னவெனில் ஒற்றைக் கம்பியில் நடந்தால் வீழ்ந்து போக வேண்டும். ஒற்றைக் கம்பியில் நடந்து வீழ்ந்தால் முடிவு மரணமே (இறப்பது). ஒழுக்கத்தை தவறவிட்டால் வாழ்வு சிறப்படையாது. இதுவே உண்மையானது. கம்பியில் நடந்து வீழ்ந்து போகாமல் எம்மைக் காப்பது போல மிகக் கவனத்தோடு ஒழுக்கத்திலிருந்து தவறி வீழ்ந்துவிடாமல் எம்மை காத்துக் கொள்ள வேண்டும்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை (தி.கு.ஒழுக்கமுடைமை 2)

நல்லது கெட்டது எது என ஆராயப்புகுந்தால் மிகச் சிறப்புடைய துணையான ஒழுக்கத்தினை ஒன்றேனும் பழுதுபடாமல் காப்பாற்றினால் அஃதே எமக்கு இவ்வுலகத்து சிறப்பான வாழ்வையும் வானுலகத்து முத்திப் பேறையும் தரும். என்பது உறுதியான உண்மையாகும். மிக்க கவனத்தோடு ஒழுக்கத்தை அழிவுபடாமல் வருந்திக்காக்க வேண்டும். அறங்கள் பலவற்றை ஆராய்ந்து நல்லதைத்தான் நான் செய்கிறேன் என்று தேர்ந்து செய்தாலும் (பூவுலகம், வானுலகம்) இருமைக்கும் துணை வருவது நல் ஒழுக்கமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமையில் கல்வி சிலையில் எழுத்து



கல் மிகவும் உறுதியானது. அதே போன்று "கல்வி" என்னும் கல்லும் உறுதியானது. கல்லில் பொறிக்கப்பட்ட சிலையும் எழுத்தும் அழியாதது. அதேபோல சிறுவயதில் படிக்கும் கல்வியும் மனதை விட்டு அகலாது. ஆதலால்தான் நம்முன்னோர் "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்று கூறி வைத்துள்ளனர். இறைவன் மற்ற உயிர்களை விட மனிதர்களாகிய எமக்கு பகுத்தறிவு என்னும் சிறந்த அறிவைத் தந்துள்ளான். இந்த பகுத்தறிவை விருத்தியடையச் செய்ய கல்வியைக் கற்பதுதான் துணையாக அமையும் இப்பிறவியிலேயே கற்று தெளிவு ஏற்படின் கல்வியைப் போல் செல்வம் வேறொன்றுமில்லை. எமக்கு இவ்உலகில் என்பதை என்றும் உணர்வோமாக.

ஆதலால் தான் எம் ஔவை மூதாட்டி "கற்கை நன்றே" "கற்கை நன்றே" பிச்சை புகினும் "கற்கை நன்றே" என்று கூறிவைத்துள்ளார். பிச்சை எடுத்தாவது படி, யாசித்தாவதுபடி ஏன் தெரியுமா? நீ யாசித்த கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் கல்வியை வயது ஏறிய பின்பெற முடியாது ஆனால் ஒரு அரசனுக்கு குடை, கொடி, ஆலவட்டம், படை, நாடு, நாட்டுமக்கள் எல்லாச் சிறப்பும் இருந்தாலும் அவன் படிக்காவிட்டால் அரசு செலுத்தும் முறை தெரியாது. அவனைவிட படித்தோனுக்கே சிறப்பு அதிகம். இருக்கும் ஆகையால் சபைநடுவே நீட்டோலையை வாசிக்கத் தெரியாதவன், மரத்திற்கும் அஃறிணை உயிர்களுக்குமே சமனானவன் ஆவான். நிமிர்ந்த நன்நடையும் நிகர் கொண்ட வாழ்வும் அவனால் வாழ முடியாது.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர் (தி.கு. கல்லாமை 10)

கல்வி கற்றவரோடு, கல்வி கல்லாதவர்களை ஒப்பிட்டால் அவர்கள் விலங்கிற்குச் சமமானவர்களென்றும் இன்னும்

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றநிலை முனியாது கற்றல் நன்றே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை நாம் கற்கும்போது சினக்காமலும், கல்விக்காக பெரும்பணம் செலவாகிறதே. பிறரிடம் விளக்கம் கேட்டு விளங்கிக் கொள்வதற்கும் படிப்பதற்கு பணம் கேட்பதற்கும் போகிறோமே என்றெண்ணி இளமையில் படிப்பதை நிறுத்திவிடக் கூடாது, நாம் எப்படிக் கற்றாலும் முழுமையாக துறைபோக கற்பதற்கு எம் வாழ்நாள் (ஆயுசு) போதாது. ஆகையால் தான் ''கற்றது கையளவு கல்லாதது உலகளவு'' என்று மிகவும் நளினமாக (நாசுக்காக) கூறியுள்ளார் எம்பிராட்டியார். அத்தோடு கல்வியைக் கற்றபின்பு கற்றபடி ஒழுகவேண்டும். நற்குண நற்செயல்களைச் செய்ய வேண்டும் என

கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக. (தி.கு. கல்வி 1)

கற்றபடி ஒழுகாவிட்டல்.......கற்ற கல்வியே முழுமையாக பயனற்றுப் போய்விடும் அன்னப்பறவை நீரையும் பாலையும் கலந்து வைத்தால் நீரை விலக்கி பாலைமட்டுமே உண்ணும் அதேபோல உலகில் நல்லவை தீயவை, கொடூரம், கண்ணியம் முதலிய எல்லாம் உலகில் கலந்தே இருக்கும். நாம் நல்லனவற்றை, கண்ணியமானவற்றை எமக்கு உறுதுணையாக்கிக் கொண்டு கொடூரச் செயல்கள் தீயவை முதலியவற்றை செய்யாமல் இருக்கவும் அவற்றுடன் நெருங்காமல் இருக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். இப்படி பிரித்தறிவதற்கு எமக்குக் கிடைத்த அறிவோடு கல்வியறிவும் துணை நிற்கும். ஆகவே செம்மைபட வாழ்வதற்கு கல்வி அறிவு மிகமிக அவசியம்.

பிள்ளைகளே! ஐந்து வயது வரை வாய் பேசாதிருந்த குமரகுருபர அடிகள் முருகன் திருவருளால் எவ்வளவோ அறிவு வரப்பெற்று முருகனைப் பற்றியும் அம்பாளைப் பற்றியும் எவ்வளவோ பாடல்களைப் பாடினார். இவர் மீனாட்சி அம்பாளை பிள்ளையாகப் பாவித்து மீனாட்சி அம்மை ''பிள்ளைத் தமிழ்'' பாடினார் என்றும் அவர்பாடும்போது அம்பாளே குழந்தையாக வந்து அவருக்கு முத்துமாலை சூடினாள் அவர் கல்வியைப் பற்றி எப்படி கூறுகின்றார் பாருங்கள்.

அறம்பொருள் இன்பம் விடுபயக்கும்
புறங்கடை நல்லிசை நாடும் - உறும் காவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியில் ஊங்கில்லை
சிற்றுயிர்கு உற்றதுணை

துன்பமுறும்போது கைகொடுக்கும் தருமம், பொருள் செல்வம் மகிழ்ச்சி, எல்லாம் கொடுக்கக் கூடிய உற்ற உறுதுணை கல்வியே என்று மிகவும் ஆதிகாலத்தில் அச்சுக் கூடங்களோ அப்பியாசக் கொப்பிகளோ பென்சில் பேனாவோ இல்லாத காலத்திலும் கூட எழுத்தாணியால் ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளார்கள். என்பதை உணர்ந்து நாம் எமக்கு இன்று கிடைத்த வசதிகள் வாய்ப்புகளைப் பயன்படுத்தி நன்றாகக் கற்று நிறைமொழி மாந்தராக வளர வாழப் பழகுவோமாக. கல்வி பசுமரத்தாணி போலப் பதியும் பருவம் இளமைப்பருவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA



# ஞானக் குழந்தை

பிள்ளையார், ஆளுடையபிள்ளையான பிள்ளை ஆனார், பின்பு ஞானக்குழந்தை ஆனார். சோழ நாட்டிலே சீர்காழிப்பதியிலே அந்தனர் குலத்திலே அப்பா சிவபாதவிருதயர்.

அம்மா பகவதி அம்மையார் இவர்கள் செய்த முன்னைநாள் தவப்பயனாக சிறந்ததோர் ஆண் மகவாக ஞானம் கைவரப் பெற்றவராக சைவ உலகிற்கு ஒளியாக திருஞானசந்பந்தர்மூர்த்தி நாயனார் தோன்றினார். பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் நாளில் ஆற்றமுடியாத படி அடம்பிடித்து, நிலைகொள்ளாதபடி, அழுது, அழுதே தோணியப்பர் கோயிலுக்கு அன்று தந்தையுடன் வந்தார்.

அப்பா மூன்று வயதுப் பிள்ளைக்கு தடிஎடுத்து அடித்தார், உறுக்கி அடக்கி வராதபடி தடுத்தார். ஆனால் குழந்தையாகிய ஞானசபம்ந்தரோ ஞானப்பசிக்கு பாலுண்டு!! அதை பருகவேண்டிய நாள் அன்று தான்! என்று ஞானத்தால் உணர்ந்து அழுதாரோ? தோணியப்பர் கோயிற் கோபுரத்தில் இடபவாகனத்தில் சிவனையும் சிவகாமி அம்மையையும் தானும் தரிசித்து தந்தையாரும் தரிசித்து, அங்கு நின்றவர்களெல்லாம் தரிக்கும் அரும்காட்சி காணும் அரும்பெரும் பேறை எண்ணி எண்ணி வெம்பி வெதும்பி கண்ணீர் மல்கினாரோ? யாரறிவார். அந்தப் பேரருட் கருணையை பிள்ளையவர்களே "ஞான மேலிட்டார்" அறிந்திருப்பார்!

எதையும் அறியாத தந்தையார் செய்வதறியாது பிள்ளையையும் தன்னுடன் கூடவே அழைத்துச் சென்றார் அல்லவா. அங்கே கோயிலின் அருகே அமைந்துள்ள பிரம்ம தீர்த்தமென்னும் திருக்குளத்தின் பக்கத்தில் பிள்ளையவர்களை இருத்திவிட்டு தாம் குளத்துள் மூழ்கினார். மூழ்கியதும் தந்தையைக் காணாத இந்த சிறிய மைந்தன் "அம்மே அப்பா" என்று கோபுரத்தை நோக்கி அழுதார். இந்த அழுகை நீருக்குள் இருந்த அப்பாவுக்குக் கேட்கவில்லை! உலகமாதாவாகிய உமைக்கும் சிற்றம்பலத்திலுறையும் சிவலோகநாதனுக்கும் கேட்டது. தந்தைக்குத் தந்தையாம் தயாபரனும், தாய்க்குத் தாயாம் தயாபரியும் மிகுந்த பரிவு மேலிட்டால்! கருணையால்! இடபத்தில் எழுந்தருளினார்கள். பிள்ளை அழுதால்.......தாய் பொறுப்பாளா? அம்மையவள் பொறுப்பாளா? தனது திருமுலைப்பாலை பொற்கிண்ணத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு பிள்ளைக்கு ஊட்டினார். பாலா அது? இல்லை இல்லை பாலின் வடிவிலே ஞானத்தை ஞாலம் சிறக்க! நான்மறைகள் சிறக்க! பதி, பசு, பாசம் என்றே! பாலாய் ஊட்டினாள் அம்மை உமையவள்.

நீராடிக் கரையேறிய தந்தை இவை ஒன்றையுமே அறியார். குழந்தையின் வாயிலிருந்து பால் வடிவதை மட்டுமே கண்டார். யார் தந்த பாலை உண்டாய், யாராவது எச்சில் படுத்திய பாலை உண்டாயோ? இந்த பாலை உனக்குத் தந்தவரைக் காட்டு என்று தடியால் அடிக்கலானார். குழந்தையோ ஆகாயத்திலே, இடபத்தில் எழுந்தருளிய பரமசிவனையும், பார்பதிதேவியையும் சுட்டிக் காட்டி "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

அங்கு அந்த சமயத்தில் கூடி நின்றவர்கள் அனைவரும் பிள்ளையவர்களின் தந்தையாரும் கூடவே சிவனையும் பார்வதியையும் சமேதரர்களாக இடபத்திலே கண்டு, களித்து, இன்புற்று ஆடிப்பாடி உள்ளம் மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். பின்பும் தோணியப்பர்மீது எத்தனையோ திருப்பதிகங்கள் பாடப்பட்டது. அன்று முதல் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஞானக்குழந்தையானார் குழந்தையான தன்மைந்தன் கோயிலுக்குள் முன்னே செல்ல அவருக்குப் பின்னே சென்றார் தந்தையார் சிவபாதவிருதையார்.

அதற்கு மறுநாள் திருக்கோலக்கா என்னும் திருப்பதிக்குச் சென்று அங்கே தன் பிஞ்சுக் கரங்களாலே தாளம் போட்டுக்கொண்டு' "மடையில் வாளை" என்னும் திருப்பதிகம் பாடியபோது, திருவைந்தெழுத்துப் பொறிக்கப் பட்ட திருப்பொற்தாளம் கைவரப் பெற்றார். அதன்பின்பு பலதலங்களுக்குச் சென்று பற்பல பதிகங்கள் பாடி பல அற்புதங்கள் செய்து மங்கையற் கரசியாருக்கும் குலச்சிறை யாருக்கும் துணை நின்று பாண்டிய மன்னனின் வெப்பு நோயை திருநீற்றினால் குணமாக்கினார். "மந்திரமாவது நீறு" என்ற பதிகம் பாடி நோய் குணமானதும் பாண்டிய மன்னன் அதிசயித்தான். பின்பு சமணர்களை வாதில் வென்றார். சுரவாதம் அனல்வாதம், புனல்வாதம் யாவற்றிலும் வென்று சைவ சமயத்தின் அருமை, பெருமைகளை உலகிற்கு உணர்த்தி சிவமெனப்பெறும், சீர்மையை நிலைநாட்டினார்.

திருவாவடுதுறையில் தனது தந்தையார் செய்த பெரும் யாகத்திற்கு "இடரினும் தளரினும்" என்னும் பதிகம்பாடி ஆயிரம் பொன்கொடை பொற்கிழி ஒன்றினைப் பெற்றுக் கொடுத்தார். ஞானப் பாலினை உண்ட ஞானக்குழந்தை யான இவர் தனக்கென ஒன்றையுமே இறைவனிடம் கேட்டுப் பெறவில்லை என்பதினை நாமும் அறிய வேண்டும். நாம் அப்படி வாழப் பழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இறைவனை மன்றாடித்தொழ மனச்சுத்தம் போதும். ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த இவர் பாடிய திருப்பதிகங்கள் 16,000. இன்று எமக்குக் கிடைத்துள்ள பதிகத் தொகை 384. இன்று எமக்குக் கிடைத்துள்ள மொத்தப் பாடல்கள் 4137. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் பிள்ளையார் இறைவனையும் இறைவியையும் இடபத்தில் கண்டு பாலூட்டப் பெற்ற போது ஆளுடைய பிள்ளையானார். திருஞானசம்பந்தர். அவர் உலகில் வாழ்ந்த கால் 16 ஆண்டுகள் மட்டுமே. பதினாறாவது வயதிலே திருநல்லூரிலே திருப்பெருமணம் என்னும் சிவன் கோயிலிலே திருமணம் முடித்த அன்று மனைவியும் அவரும் அங்கு கூடி நின்றவர்கள் எல்லோரும் அங்கு தோன்றிய சோதியுடன் கலந்து சிவனுடைய பாதார நிழலைச் சென்றடைந்தனர். திருமண வைபவத்தின்போது கிடைத்த அசரீரி வாக்கினாலேயே....அனைவரும் சோதியுட் கலக்கும்பேறு பெற்றனர். இவரை சைவ சமயகுரவர்கள் நால்வருள் முதல் குரவரென்றும், சைவ சமயத்தின் காவலர் என்றும் கூறப்படுகிறது. இவர் சிவம் பெருகும் ஞானத்தால் தூண்டப்பெற்றார். அதனால் தலங்கள் தோறும் சென்று பக்தி பெருகப்பெருக திருப்பதிகங்கள் பாடினார். இவர் வயதில் மிகவும் சிறியவறாதலினால் அவரின் பிஞ்சுக்கால்கள் நோகப் பொறுக்காமல் இம்மபிரனே (சிவபெருமான்) வருத்தமுற்றார். வருந்திய அவர் தனக் கருணைக்கு அடையாளமாக இந்தச் சிறுவனான ஞானக் குழந்தைக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் என்ற விருதுகளைக் கொடுத்தருளினார். பக்தர்கள் அனைவரும் தலங்கள் தோறும் இவரை முத்திச்சிவிகையிலேயே தோல்களில் சுமந்து சென்றார்கள். இந்தக் குழந்தைக் குரவர் காதலாகிக் கசிந்து என்ற திருப்பதிகத்தினைப் இறுதியாகப்பாடி திருநல்லூரில் சாமீப முத்தியடைந்தார்.

195121



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவையார் ஆற்றிய பணிகள்

"அம்மை" என்பதுதான்! அம்மா, அம்மை என்பது திரிபுமொழியாக வந்து ஔவை என்று சிறப்புணரவைத்துள்ளது. விகுதியாக ஆல்சேர்த்து உருவாகியதே ஔவையார். பெண்களில் உயந்தவரைக் குறிப்பதே அவ்வையார் எனலாம். ஆதிபகவனின் முதற்பிள்ளையான இவர் பிறந்த இடத்திலேயே கைவிடப்பட்டு செல்லவேண்டுமென்பது தந்தையான பகவனின் கட்டளை? ஆனால் அன்னைமனம் அங்கலாய்த்துத் துடிதுடித்தது. அன்னைகலங்கினாள் கண்ணீர் சொரிந்தாள். ஆனாலும் கைவிட்டே செல்லவேண்டிய நிலை. என்ன செய்வது கணவன் சொல்லை மீறிவேறொன்றுமே செய்ய முடியாது.

இவற்றை யெல்லாம் முற்பிறப்புத் தவப்பயனால் ஔவையார் உணர்ந்து தான் பிறந்தாரோ, என்னவோ, பிறந்த உடனேயே தனது தாய்மனம் குளிர திடுக்குற்று, திணறிநிற்க என்றோ அதன் பின்பு அன்னையவள் துணிவுபெற ஆறுதல் அடைய என்றே பிறந்த மாத்திரத்தில் குழந்தை பாடியது. அவருடைய "நா" பாடல் வடிவில் விடை கூறியது தாய்க்கு பாடல் இதோ

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனும் செத்து விட்டானோ
முட்ட முட்ட பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ. (ஔவையார் பாடல்)

"சிவன்" தனது முழுவிருப்பத்துடன் நீ பிறந்த இடத்திலேயே என்னை விட்டு விட்டுத்தான் செல்ல வேண்டும் என்று என் தலையில் எழுதிவிட்டான். இப்படி எழுதிய சிவன் செத்து விட்டானோ - இல்லை. பஞ்சத்தாலே நெருக்குண்டு நெருக்குப் பட்டாலும் முழுப்பாரமும் அவனுக்கே! ஆகையால் உன்நெஞ்சு அஞ்சிக் கவலையுறாது நீ செல் என்றார். (நான் 6ம் வகுப்பில் ஔவையார் என்ற தமிழ்ப் பாடப் புத்தகத்தில் படித்த பாடல்) இப்படிப் பாடிய ஔவைக் குழந்தையின் நாவும், மனமும், மனத்தில் ஊறும் எண்ணமும், அவருடைய உயிருமே. பக்தியோடும், நன்னெறியோடும், நன்வழியோடும் ஒன்று கலந்து விட்டது. அவர் வளர வளர இறைவனிடம் கேட்டு முதுமை பெற்றுக் கொண்டார்.

முதுமையும், முதிர்வு பெற்ற அருளும் பெற்று, தெய்வபக்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறந்து விளங்கினார். விநாயகர் பூஜை விநாயகர்பக்தி விநாயகர் துணை என்றும், முருகன்துணை, முருகபக்தி என்றுமே என்ற நம்பிக்கையுடனேயே வளரலானார். வாழ்ந்து வந்தார்.

வாழும் காலம்பூராவும் தாளாத தளர்வில்லாத இறைநம்பிக்கையோடு சமுதாய வளர்ச்சிக்காக, மனித நேய மலர்ச்சிக்காக அறவழிக் கடமைகளை நிறையவே செய்தார். அவர்கள் இயற்றிய ஒரு வரிப் பொருள் பொதித்ததே ஆத்திசூடி, கொன்றை வேந்தன் நாலடிப் பொருள் பொதிந்த மூதுரை, நல்வழி, பந்தனந்தாதி ஆகிய நீதி நூல்கள் சிறியோருக்கும் வளர்ந்தோருக்கும் சிரித்தும், சிந்தித்தும் பயிலக் கூடியன. பாடசாலைப் பருவத்தினர் விளையாடி விளையாடிப் படித்தாலும், மனம்விட்டு அகலாதன. ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்ற முதுமொழிக்கிணங்க ஒளவைமூதாட்டி சின்னஞ் சிறுபிள்ளைகட்கும், உலகிற்கும் செய்த தனிப்பெரும் பணியாகும். இவை இவர் ''பெண்குலத்தின் பொன்விளக்கு'' அவர் இப்படியான நற்பெரும் பணிகளைச் செய்ய என்றே பிறந்தார். உலகில் தமிழ் கூறும், மூலைமுடுக்கெல்லாம் அவரது பெருமை நின்று நிலவும், துலங்கிப் பொலிவுறும், உலகம் மேன்மையுற செம்மையுற எம்குலப் பெருமை, கடமை மேலோங்க என்றே அவதாரம் எடுத்தார். நாம் அனைவரும் சீர்மையுற வேண்டும் நன்மக்கள் வேண்டும் என்று செம்மைகள் நிறைந்த பற்பல வழிகளையும் உலகிற்குச் செய்தார்.

அம்மையவர்கள் தன் தவவலிமையாலும், பக்தியாலும், நிறைந்த மன ஒருமைப்பாட்டாலும் பனம் பழம் வீழாத காலத்திலும் கூட பனம்துண்டம் பழம் தரச் செய்தார். திருமணவைபவம் ஒன்றின் போது பெண்ணை ஆற்றில் பாலும், பழமும், நெய்யும் பெருகிவருமாறு செய்தார். அத்தோடு வருணனை பொன்மாரி பொழியச் செய்தார். குறவரிடையே பழம் பேய்களின் சாபம் நீக்கினார். இவையெல்லாம் எம்பாட்டியின் அரும்பெரும் அருளுடன் கூடியபணிகளாகும். ஒளவை பாடிய

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயருவான் (ஒளவையார் பாடல்)

குலோத்துங்க சோழன் இளவரசுப் பட்டம்பெற்று முடிசூடிய நன்நாளில் முடி சூட்டுக்கு வந்த புலவர்களெல்லோரும் அவைப் புலவர்களும் அவரை வாழ்த்தினார்கள். ஒளவையாரும் இந்த வரப்புயர என்ற பாடலைப்பாடி வாழ்த்தினார். புலவர்களும், அவையிலுள்ள அனைவரும் பொருள் விளங்காமல் முழிபிதுங்க விழித்து விழித்துத் திகைத்தனர். வயலின் வரப்பு எவ்வளவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயருகிறதோ அவ்வளவு உயரமாக நெல்லின் பாத்தியிலுள்ள நீர் இருக்கும் நீர் இருக்கிற அளவு நெல் உயரும் நெல் நிறைந்து உயர்ந்து வளர்ந்து பசிப்பிணி தீரும் பஞ்சமின்றி இருந்தால் குடிமக்களெல்லாம் சிறப்பாகவும் சந்தோஷமாகவும் உயர்ந்த வாழ்வு வாழ்வர். அப்படி நாட்டு மக்கள் களிப்புடன் வாழ்ந்தால் மன்னன் சகல சிறப்புடனும் வாழ்வான். இதுதான் அதன் பொருள். இந்தப் பொருள் விளக்கமெல்லாம் வியப்பல்ல. வேடிக்கையல்ல, ஆனால் சபையில் அவர்கள் புரிந்து கொள்ள முடியாத பொருள் பொதிந்து இருந்தது.

ஔவையார் அவர்களின் நாவில் "நா" நயம்பட நல்லன எல்லாம் நயம்பட நாடுகள் எல்லாம் நலம்பெற அவரின் "நாவில்" வெண்டாமரையாள் வீற்றிருந்து விநாயகர் அருளும் சிறந்தது தான் இதற்குக் காரணம். இதனால்தான் பிள்ளைகளே நாம் எப்பொழுதும் இடையறாது இறைவனுடைய பாதார விந்தங்களைத் தொழ வேண்டும். பாருங்கள் இந்தப் பெண்புலவரை எல்லாப் புலவர்களும், புரவர்களும் தத்தழித்துத் தலைகுனியும் வண்ணம் ஒரு நொடியில் நான்கு வரியில் நாடு, மன்னன், மக்கள், பசி பட்டினி, நாட்டின் பசிப்பிணி போக்கும் சிறப்பு, அதற்கு நாட்டின் உயர்வு இவற்றையெல்லாம் மிகமிகத் திறமையாகக் கூறிவிட்டார். அவரின் விற்பன்னத் திறனெங்கே, வினைத் திறனெங்கே யாரறிவார் அவரது தகைமைகளும், திறமைகளும்.

இதேபோன்று பாரிமகளிரான அங்கவை சங்கவை திருமணத்தின்போது மணஓலையை விநாயகர் கைப்பட எழுதி மூவேந்தர்கட்கு அனுப்பினார். பிராட்டியாரின் ஆழ்ந்த தமிழ் புலமையை. தமிழாக விளங்கும் கடவுளார் முருகப் பெருமான் சோதிக்க விரும்பினார். விளையாடினார்.

பாட்டி நாடுகள் தோறும் கால்நடையாகச் செல்வதே வழமை. ஒருநாள் கடும் பசிதாகத்துடன் நாவல் மரத்தின் கீழ் அமர்ந்துவிட்டார். மரத்தில் ஆடுகள் மேய்க்கும் இடையனாக, சிறுவனாக முருகன் தோன்றி பாட்டி களைப்புடன் பசியுடன் இருக்கிறீர்களே! நாவற்பழம் பறித்து போடட்டா என்றார். ஆம் என்றார் பாட்டியும். "சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டதும் திகைப்படைந்த அவருக்கு விளங்கவில்லை. விளங்காதவர் போல்க் காட்டிக் கொள்ளாமல் தம்பி சுட்டபழம் போடு என்றார். மணலில் வீழ்ந்த பழத்தை மணலைப் போக்குவதற்காக பொறுக்கி எடுத்து வாயால் ஊதினார் உண்பதற்காக. அந்த சிறுவன் "பாட்டி பழம் சுடுகிறதா" நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள் என்றார். முருகன் அப்பொழுதுதான் தடுமாறிய தமிழ்க்கருத்து (சுடுகிறதா) என்றது விளங்கியது. எவ்வளவு புலமை இருந்தாலும் பெருமை கொள்ளக் கூடாது தலைக்கனம் கூடாது. நாமும் ஒருநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாற வேண்டிவரும் எமக்கும் தலைக்கனம் கூடாது என்று இதிலிருந்து நாமும் உணர்வோமாக. ஔவையாரும் அன்று உணர்ந்தவரானார். பார்த்தீர்களா? முருகனால் வெட்கித் தலைகுனிந்தார். அவரை சோதனை செய்ய வந்த தமிழ்க் கடவுள் (முருகன்) மறைந்தருளினார்.

விநாயகருக்கு மாங்கனி கொடுத்ததும் முருகன் தந்தை தாயைப் பிரிந்த பாலகனாக ஆண்டியாக பழனி மலைக்குப் போய்விட்டார் அவரை அன்னை தந்தையுடன் சேரவைக்க அன்னை தந்தையின் கவலையை மாற்ற அரும்பாடுபட்டு சேரவைத்தார். நம்பிராட்டியார். தம் கவித்துவத்திறத்தால் இப்படி அம்மை அப்பனுடன் முருகன் சேர்ந்து கொண்ட காட்சி அன்று முதல் இன்றுவரை சோமாஸ்கந்த முகூர்தமாகச் சிவன்கோவில்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. இதிலும் பிராட்டியார் ஆழ்ந்த புலமையில், தெளிந்த அனுபவத்தில், வயதில், மெய்ஞானத்தில், தீர்கதரிசனத்தில், இறை அன்பில் எல்லாம் மூத்தோராக முதியோராகவே முதலுமாகவே விளங்கினார். அவருடைய பணிகள் என்றென்றும் காலத்தால் கூட அழியாதவைகளே. பெரிய பெரிய நீதி நூல்களில் காணப்படும் கருத்துரைகளையெல்லாம் வடித்து சிறியோர்கட்கும் விளங்கும் வகையில் எளிமை ததும்ப அளித்துள்ளார்.

அவரின் அறிவுச் செல்வங்களைப் போற்றி எமதும், சிறியோரதும், விருத்தாப்பியரதும் அதிகாரமாகப் பேணி, எமது சோதனைகள், வேதனைகள், சாதனைகள் எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாக அவருடைய அருளமுதங்களை அன்புடன் பருகி எளிதாக இலகுவாககக் கற்று சிறியனவற்றைக்கூட பெரிதாக மனத்தினுள் பதியவைப்போமாக. பதியவைப்பதோடு மட்டுமல்ல முற்று முணர்ந்து, முழுதும் உணர்ந்து அவரின் நல்வழி, நன்நெறி மூதுரை முதலிய அறவழி அடிச்சுவட்டை அரிதாகப் பின்பற்றி வாழ்வோமாக. கற்கக்கற்க கல்வி துலங்கும். கவித்துவமும் நற்பண்பும் துலங்கும் "மூ தாட்டி முன்னுரை மூவுலகுக்குமே வழிகாட்டும்" அரும் பணிபுரியவே ஔவையார் எழுத்தறிவு இல்லாத காலத்தில் அவதரித்தார் என்று நாம் அவரை என்றென்றும் ஏற்றிப் போற்ற வேண்டும். சங்க இலக்கியங்களில் கூட ஔவையார் பாடிய பாடல்கள் பல இடம் பிடித்துள்ளன.

"மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்
மூதாட்டிசொல் முழுவதும் அருநெறி தரும் அமுதம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் விரும்பும் புலவர்

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரை அறியாது யாரும் இருந்திருக்க மாட்டார்கள். இவர் முதற்சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் முச்சங்க காலத்திலுமே பாண்டிய மன்னர்கட்கு வழிவழியாக அவைப்புலவராக இருந்துவந்தவர். தமிழ்மீது கொண்ட தாழாத பற்றிலும் தலைவணங்காத புலமைத்திறத்தாலும் சிறந்து விளங்கினார். இவருடன் பாண்டிய மன்னனுடைய அவையிலே தருமி வாயிலாக புலமைப் போர், தமிழ்ப்போர், சொற்போர், தொடுக்க எண்ணினார் எம்பிரான் தமிழ் அன்னைக்கு சூட்டப்படும் புகழ்மாலையோ ஆபரணமாலையோ சொற்பிழை பொருட்பிழையற்று இருக்கவேண்டும் என்பது நக்கீரரின் பேரவாவும் தாழாத தமிழ்பற்றுமாகும்.

இதை சோதிக்கவும் நக்கீரரை ஆட்கொளவும் திருவுளம்கொண்டார் எம் பெருமான். ஆகையால் பாண்டியமன்னனுக்கு தன் மனைவியின் கூந்தலில் வந்த நறுமணம் செயற்கையானதா? இயற்கையானதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தினார். இந்த சந்தேகத்தை அவைப்புலவர்களால் சங்கப்புலவர்களால் தீர்க்க முடியவில்லை!! சிவபெருமானின் திரு உளநோக்கோடு தருமி அவைக்குப் பாடலுடன் வந்தார். பாடலைப்பாடிய தருமியை மகிழ்ந்து பாராட்டி பொற்கிழியை வழங்கினான் அரசன்.

அதைத் தடுத்துநிறுத்தி பொருட்குற்றமிருப்பதாகக் குற்றம் சாட்டினார் நக்கீரர்! இதை கண்ணுற்ற சிவன் அவைக்குப் புலவர் வேடம் தரித்து வந்தார். புலவர் வேடமுள்ள சிவனுடன் உக்கிரவாதம் புரிந்தார் நக்கீரர். இதனால் "சிவனுடன் வாதிட்ட செந்தமிழ்ப் புலவரானார்". சொற்குற்றமானால் பொறுத்துவிடலாம் செய்யுளில் பொருள்குற்றமுண்டு குற்றமுள்ள பாடலுக்கு மன்னவன் பரிசுவழங்க சங்கப்புலவர்களெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதா? புலவரே!! நீர் நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் நெற்றிக்கண்ணால் என்னைச் சுட்டெரித்தாலும் "குற்றம் குற்றமே" என்றார் கீரர் உமாதேவியார் கூந்தலில் கூட இயற்கை மனம் கிடையாது என்றார். பின்பு

சங்கறுப்பது எங்கள் குலம்
சங்கரனாக்கு ஏது குலம்
சங்கை அரிந்துண்டு வாழ்வோம்
அரனே உன்போல் இரந்துண்டு வாழ்வதில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இடித்துரைத்தார் எம்பிரானை. நக்கீரா!! கீரா!! வந்திருப்பது சிவன் என்று அறிந்தும் நீ தமிழ் மீதுள்ள தாழாத பற்றினால் "குற்றம் குற்றமே" என்று எதிர்வாதம் புரிந்த நீ! என்னையும் இரந்தும் உண்பாய் என்று! பழித்துரைத்தாய் "உன் தமிழ் புலமையை" உலகிற்கு காட்டவே இந்த "திருவிளையாட்டு" விளையாடினோம் என்றார் சிவன். ஆயினும் உக்கிரவாதம் புரிந்ததாலும் சர்வலோக நாயகியாம் உமையின் கூந்தலை பழித்துரைத்தாலும் நீ குஷ்ட நோய் வரக்கடவாய் என்றும் சபித்தார். சிவனின் சாபம் நீங்கப்பெற முருகனிடம் பக்திகொண்டார் நக்கீரர். கீரனாரின் நான் என்ற அகந்தையில் இருந்தும் அவரை விழிப்படையச்செய்து முருகபக்தியால் சிவனின் சாபமும், குட்டை நோயின் பரிதவிப்பு இரண்டும் அவர் பொற்றாமரை வாவியில் தினமும் நீராட நீங்கியது. அவர் முருகன் மேல் திருமுருகாற்றுப்படை பாடி கைலையைத் தரிசித்து கைலை நாதன் அருளாலும், மூவுலகும் போற்றி புகழ்ந்திருக்கும் உமையம்மையின் அருளாலும் முத்தியின்பம் பெற்று வீடுபேறு கண்டார். பக்தியின் கருணை கடலே எம்பிரான் இஃது மதுரையில் நடந்த அறுபத்தி நான்கு திருவிளையாடல்களில் "தருமிக்கு பொற்கிழி அழித்த" படலமாகும். எவ்வளவு புலமை இருந்தாலும் நான் எனது எனும் அகந்தை கொள்ளக் கூடாது என்ற படிப்பினை இதிலிருந்து புலனாகிறது அல்லவா.

1951
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல நட்பு



"மகாத்மா காந்தியை" ஒரு "அகிம்சைவாதி" என்று அறியாதாரில்லை. சிறுபிள்ளைகளும் காந்தித் தாத்தாவை, காந்தியடிகளை நன்கு அறிந்திருப்பார்கள். தாத்தா தனது தாயிடத்திலும், தந்தையிடத்திலும் மிகுந்த அன்பும் அளவுகடந்த மரியாதையும் வைத்திருந்தார். தனது பெற்றோருக்கு மிகவும் நற்குணமுள்ளவராகவும், பணிந்து, கீழ்படிந்து, நடப்பவராகவும் இருந்தார். இப்படிப்பட்ட எமது தாத்தாவைக்கூட துன்பகரமான நட்பும், துட்டர்களின் இணக்கமும் ஒரு காலத்தில் அதிகமாக வாட்டி வதைத்தது என்பதை நாமும் உணர்ந்து எம்மையும் நல்லிணக்கமுள்ளவரோடு மட்டுமே இணங்கி நடக்கத்தக்கதாக நாமே நம்மை பழக்கிக் கொள்ள வேண்டும். இது எமது உயர்ச்சிக்கு அவசியமானது என்பதை மனதில் முழுமையாக எண்ண வேண்டும்.

அவருடைய நண்பர்கள் நல்லது? நல்லது? என்று நம்பிக்கை கொள்ளும் வகையில் எடுத்துக் கூறி மிதமிஞ்சிக் குடிக்கவும், மாமிசம் உண்ணவும் பழக்கி விட்டார்கள். அவரும் அறியாமையால் முதலில் நன்றாக இருக்கிறது என்றே எண்ணினார். பின்பு தனிமையில் இருக்கும்போது, தான் செய்வது தவறு என்று சிந்திக்கலானார். கண்ணீர் விட்டு அழுதார் மன உறுத்தலால் கலங்கினார். தந்தையாரிடம் ஓடிச்சென்றார். தான் பழகிக் கொண்ட பழக்க வழங்கங்களை ஒன்றுவிடாமல் கண்ணீர் மல்கக் கூறினார். தனது உள்ளத்தில் உள்ள ஒன்றையேனும் மறைக்காமல் எழுதி தன்பேற்றோரிடத்தில் கொடுத்து தனக்கு தகுந்த தண்டனை தருமாறும் தன்னை அடிக்கும்படியும் வேண்டிக் கொண்டார். தன் குற்றத்தை இனம்கண்டு உள்ளத்தின் உறுத்தலில் இருந்து விடுபட என்று எண்ணி ஒப்புக் கொண்டாரோ! அன்று முதல் கேடான நட்பிலிருந்து விலகிக் கொண்டார். கேடான நட்பு கெடுதியே விளைவிக்கும் என்றும் உணர்ந்து கொண்டார்.

பின்பு உயர்கல்விக்காக பாரீஸ்நகர் புறப்பட ஆயத்தமானபோது, அவரது அன்னை கலங்கினார், அஞ்சினார். எப்படி? "ஒருகுடம் பாலில் ஒரு துளி நஞ்சு சேர்ந்தால்" முழுப்பாலுமே நஞ்சாகிவிடும். ஆகவே தனது மகன் மேலை நாட்டவர்களுடன் சேர்ந்து மாமிசம் உண்ணும் பழக்கத்தையும் குடிப்பழக்கத்தையும் பழகிவிடுவான் என்றே வருந்தினார். ஆகையால் தன் மகனை அழைத்து ஒரு குடம் பாலில்......என்ற பழமொழியைக் கூறி விளங்க வைத்தார். ஆனால் காந்தியடிகளோ "கல்வியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கம் கல்வியே கருத்தனம்'' என்ற உணர்வோடு "சான்றோனாகக் கற்று'' பெற்றோருக்கும், உலகிற்கும், தனக்கும் மிகுந்த பெருமை தேடிக் கொண்டார். காந்தி மேலை நாட்டில் கூட ஒழுக்கம் தவறாது மேல்படிப்பை மேற்கொண்டார். அத்தோடு வாய்மை, அகிம்சை, நேர்மை, ஒழுக்கம், பொறுமை, கடமை, இவை ஆறுமே அவரை "மகாத்மா காந்தியாக'' மாற்றியது. அவர் வழிகள் படிப்பனையாக எல்லோருக்கும் அமைய வேண்டும். வளர்ந்து வரும் சிறார்கள் காந்தியடிகளைப் போன்று குற்றத்தை நன்குணர்ந்து, பெற்றோரிடம் தமது குற்றச் செயல்களை மறைக்காமல் கூறி, தந்தை தாயாருடைய பாதுகாப்புடன் துஷ்டர்களுடன் சேராமல் நற்குண நண்பர்களை மட்டுமே நட்புக் கொள்ள சிறு வயதிலேயே பழகிக் கொண்டார். நாமும் அவரைப்போல நல்ல நண்பர்களுடன் நட்புக்கொள்ளப் பழக வேண்டும்.

இதே போல எனது பள்ளிப் பருவம் முடியும் வரையும் விடுதி வாழ்விலும் நான் நான்கு பிள்ளைகளுடன் நட்புக் கொள்ளக் கிடைத்தது. முதலாமவள் என்னைவிட மூன்று வயது கூடியவள். ஆனால் ஓரே வகுப்பு (6ம் வயது) எனக்கு என் தந்தையார் செலவுக்குத் தந்த காசை எடுத்து தன் இடுப்புப் பட்டிக்குள் களவாக மறைத்துக் கொண்டாள். பின்பு நான் காசைக் காணவில்லை என்று தேடித் தேம்பித், தேம்பி அழுதபோது, மிகவும் தேற்றி அன்பாக அணைத்து ஆறுதல் கூறுவதுபோல் நடித்தாள். என்னைவிட மூன்று வயது மூத்தவள்தானே நான்சிறுபிள்ளைதானே ஆனாலும் அன்றே உணர்ந்து கொண்டேன் என்தவறை அன்றிலிருந்து அவளை விலக்கிவிட்டேன் நட்பாம் நட்பு. நடிக்கும் நண்பி அவள் என உணர்ந்து கொண்டேன்.

அடுத்தவள் மிகவும் கெட்டிக்காரி, நானும் அவளும் அனேகமான நேரமெல்லாம் சேர்ந்தே படிப்போம் சிறுதொகைப் பணத்தை அவளின் செலவுக்கென கைமாற்றலாகக் கொடுத்தேன். இன்று தருவேன் நாளை தருவேன் என்று கூறிக்கூறி பின்பு தன்னிடம் தருவதற்குப் பணமில்லை என்றே சொல்லி விட்டாள். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவள் என நான் பணத்தைக் கேட்காமலே இணைந்து படிப்பதை மேற்கொண்டேன். படிப்பது அவசியமல்லவா. அதனால் அவளை நான் கைவிடவில்லை. பணமில்லாவிட்டாலும் படிப்பில் மிகுந்த அக்கறையுள்ளவள். கெட்டிக்காரி என வகுப்பில் போற்றப்படுபவள்.

மூன்றாமவள் தாயும் தந்தையுமில்லாதவள் (விடுதியில்) ஓரளவு காசை அவளின் செலவுக்கெனக் கொடுத்தேன். அவ்வளவுதான் அவளின் நாளாந்தப் பொழுது போக்கு சிற்றுண்டிக் கார பெண்மணியுடன் கூடவே அமர்ந்திருப்பது தான். இது உதவாத நட்பு அப்படியே விட்டே விட்டேன். ஆனால் என்னைக் காணும் போதெல்லாம் நாளை தருவேன், நாளை தருவேன் என்றே கூறுவாள்

எனது பெற்றோர் எனக்கு தந்த காசுகளையும் என் தந்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்பட்டு ஊதியம் பெறுவதையும் என் ஏமாற்றத்தோடு கூடிய அறியாமையையும் நினைத்து நினைத்து உள்ளம் வெதும்பினேன். அன்று முதல் ஏமாறும் பழக்கத்திற்கு முடிவு கட்டி திருந்தினேன். 8ம் வகுப்புடன் (தரம்) விடுதியிலிருந்தும் விலகி பாடசாலைக்கு வீட்டிலிருந்து வரத் தொடங்கினேன். நான்காமவள் பவளம் உண்மையில் "பவளம்" என்னைவிட அவளும் மூன்று வயது கூடியவள். எனக்கு நல்ல நல்ல அறிவுரைகள் கூறுவாள் படிப்பில் கட்டையவள். நன்றாகப் பாடுவாள் இருவரும் ஓய்வு நேரங்களில் தேவார, திருவாசகம் முதல், கவிமணி பாடல்கள் ஈறாகச் சேர்ந்தே பாடுவோம் நான் ஒரு வேளை சாப்பிடா விட்டால் கூடத் தானும் சாப்பிடவே மாட்டாள். இறுதிவரை நன்றாகவே பழகினோம். இன்றுவரை அவள் நினைவு என்நெஞ்சை விட்டு அகலவில்லை. அவள் நல்லதொரு நண்பி. உயிர் கொடுக்கும் நட்பு அது.

உடுக்கை யிழந்தவன் கைபோ லாங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு (தி.கு நட்பு 8)

பிள்ளைகளே! தவறுகளை, துன்பங்களை களைகிறோம் என்று கூறி கெடுதிகளைச் செய்யும் வஞ்சனைக்குரிய நண்பர்கள் உங்கள் உயர்ச்சிகளையே அழித்து விடுவார்கள். கவனம், கவனம்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேல்சென் றிடித்தல் பொருட்டு (தி.கு நட்பு 4)

KOHA
JPL

நட்பு சிரித்து மகிழ்வதற்கும், ஒருவன் கைப்பொருளை ஏமாற்றி தன் பைக்குள் போடுவதற்குமன்று நண்பன் தவறான வழியில் தவறுகள் செய்யும் போது எடுத்துக்கூறி திருந்தி நடக்க வைப்பவனே உண்மை நண்பன் உண்மை நண்பி என்பதை உணர்ந்து கொள்க.

"சத்திய சோதனை" என்ற நூலில் எமது "காந்தித் தாத்தா" தனது சுயசரிதம் எழுதியுள்ளார். இந்த சுயசரித நூலில் தான் நட்பால் கெட்டுப் போய்! குற்றத்தை ஒப்புக் கொண்டு திருந்தியதை சிறப்புறக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே பிள்ளைகளே! நண்பர்கள் விடயத்தில் சிறு பராயத்திலும், வளர்ந்து வரும் போதும் பாடசாலையிலும், வெளிச் சூழலிலும், தொழில் நிறுவனங்களிலும் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியப் பழக வேண்டும். சாதுரியமாகவே நடக்க ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட அனுபவங்களே நல் வழிநல்கும். அனுபவங்களையும் கொண்டு படிப்பினையாலும் திருந்தி விடலாம். கூரிய புத்தியும், சீரிய சிந்தனையும் துணிந்த நெஞ்சுரமும் இருந்தால் உடனேயே திருந்தி விடலாம்.

"நட்பா அது நலன் கெடவும் வைக்கும் நலம் பெருகவும் வழிதரும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19512



# வாழ்க்கைக்கேற்ற கல்விமுறை

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லன் யாம் என்னும் நடுவு நிலைமை ஆக்கத்தால்
கல்வி அழகே அழகே (நாவலடியார்)

தலைமயிர் (குஞ்சி) அழகோ? உயர்ந்த விலையுள்ள ஆடை அணிகலன்கள் மஞ்சள் முதலிய உடற் பூச்சுக்கள் பூசுவதனால் ஏற்படும் அழகோ உண்மையான அழகைத் தருபவை அல்ல. ஆண், பெண் இருபாலாரும் உற்றுணரும் தன்மையுடையவராகவும், நடுவுநிலைமை உடையவராகவும், நல்லொழுக்கம் எது என்று மனதிலே ஆராய்ந்து நல் ஒழுக்கம் எனக் கருதி வாழும் ஒரு நிலைக்கு ஆளாக்கக் கூடிய கல்வியால் உண்டாகும் அழகே சிறந்த அழகாகும். ஆம் கல்வி அழகே அழகு. மற்றெல்லாம் அழகல்ல. உண்மை அழகு கல்வியால்த் துலங்கும்.

வளர்ந்து வரும் சிறார்களே! பிள்ளைகளே! கல்வியறிவுதான் ஒருவனை நல்லநிலையில் நீதிபகர வைக்கும். உலகியல் செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்வியே யன்றி பிற செல்வங்கள் உயர்ந்தனவல்ல. இந்த உயர்ந்த அறிவுச் செல்வத்தை சிறந்த உயர்ந்த நீதிநூல்களை நன்நெறி நூல்களைக் கற்பதன் மூலமே பெறமுடியும்.

பகுத்தறிவு எனப்படும் ஆறாம் அறிவை எமக்கு இறைவன் தந்துள்ளான். ஐந்து அறிவுடையதாகிய கண் பார்ப்பதற்கும், காது கேட்பதற்கும், வாய் பேசுவதற்கும், இறைவனை வாழ்த்திப் பாடுவதற்கும், மூக்கு சுவாசிப்பதற்கும் முகர்வதற்கும், உடல் உணர்வதற்கும், அத்தோடு கூடவே மானிடரான நாம் பகுத்தறிவான 6ம் அறிவும் கிடைக்கப் பெற்றுள்ளோம். பகுத்தறிவை படித்துப் படித்து பகுத்தறிந்து பகுத்தறிந்து பெற வேண்டும். இரும்பு கூடேற்றி அடிக்க அடிக்க இழகும். கல்வி படிக்கப் படிக்கத்தான் எளிதாகும்.

கல்வி அறிவு 64 கலைகளையுடையது. இது ஆய்ந்தறிந்து தேடிக் கண்டு பிடித்த கற்றறிந்தோரால் கூறப்பட்ட உண்மை. கல்விக்கும், கலைக்கும், படிப்புக்கும் தெய்வம் சரஸ்வதியே இந்த சரஸ்வதித் தெய்வத்தை, சரஸ்வதித் தாயாரை 64 கலையுடையவளாக 64 கலைகளையும் அள்ளி வழங்குபவளாக நாம் கருதுகின்றோம்.



அதனால் தான்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தினுள்ளே இருப்பாள் இங்கு வாராதிடர்

சரஸ்வதித் தெய்வத்தை முழுமுதற் பொருளாக வைத்து எந்நாளும் தொழுது தொழுது இடர்வராது இருக்க வேண்டுதல் செய்து கொண்டு அத்தோடு கூடவே ஔவையாரின் நீதிநெறிப் பாடலையும் நாம் பாடிப் படித்து எம் கல்வியை வளப்படுத்த வேண்டும்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனை செய்வாரோடு இணங்க வேண்டாம்...

பிள்ளைகளே! கல்வியைப் பயிலாமல் ஒருநாளும் இருக்கக் கூடாது பொல்லாததை செய்யக் கூடாது. குழந்தைப் பாடல்களிலேயே, படிக்காமல் இராதே, மாதாவை மறவாதே, துஷ்டத்தனமுள்ளவர்களோடு அதாவது கெடுதியைத் தருவபர்களோடு துஷ்டர்களோடு சேராதே என்றெல்லாம் நீதியையும், படிப்பினையையும் கூறி ஆடிப் பாடிப் படிக்க வைத்துவிட்டார். இதேபோலே உலகோரால் சிறந்துயர்ந்த நீதி நூலாக, ஞானநூலாக கருதப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர்கூட கல்வியை சிறப்புறக் கூறுகிறார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை (தி.கு. கல்வி 10வது)

ஒருவனுக்கு கல்வியைப்போல கேடில்லாத பெரும் செல்வம் வேறொன்றுமில்லை. ஏனையவைகளான பணம் வைரம், பொன், பொருள் சிறந்த செல்வங்களாக ஆகமாட்டாது. “செல்வத்துள் செல்வம் கல்வியே”. கல்விச் செல்வம் கொள்ளையர்களால் கொள்ளையடிக்க முடியாததும், அன்பு, வாய்மை, சால்பு, நாண், ஒப்புரவு, இவ்வைந்தையும் அறிவுறித்தி அறிய வைப்பதும் கல்வி தந்த அறிவே. கல்வி துலங்கவேண்டுமானால் ஒழுக்கத்தை கடைப் பிடிக்க வேண்டும். ஒழுக்கமின்றேல் கல்வியால் பயன் இல்லை.

‘கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக:’ (தி. கு. கல்வி 1)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றபடி ஒழுகத்தெரிந்தவனே! மிகவும் தர்மமுடையவன், கேடில்லாதவன் புகழுடையவன் அறிவும் அறமும் அவனுக்கு ஒன்று சேர அமையும்.

மண்ணில் பிறந்த மனிதரிடையே எத்தனை எத்தனையோ வேற்றுமைகள், மதவேறுபாடு, நிறவேறுபாடு, மொழிவேறுபாடு, கருத்து வேறுபாடு, உருவவேறுபாடு, குல வேறுபாடு, ஆனால் அறிவு, கல்வி என்ற இந்த மூன்று எழுத்து விடயங்கள் இரண்டும் மட்டுமே உலகில் அனைவோருக்கும் பொதுவான தேவைகளாகுவன. ஆகையால் கல்வியை நாம் ஆழ்ந்து மனதில் பதித்து அறிவை அகழ்ந்து மனதில் சந்தித்துச் சிந்தித்துப் பதியத்தக்கதாக கற்க வேண்டும்.

தொட்டனைத்தூறும் மணற்கேணி
மாந்தற்குக் கற்றனைத்தூறும் அறிவு (தி.கு.கல்வி 6)

கண்ணுடையர் என்பவர்கற்றோர் முகத்திரண்டு
புண் உடையவர் கல்லாதவர் (தி.கு.கல்வி 3)

ஆம் மாணவச் செல்வங்களே! அள்ள அள்ளக் குறையாமல் ஊறி ஊறிப் பெருகுவது மனிதவர்க்கத்துக்குக் கல்வி அறிவே அத்தோடு, வீட்டில் வெளிச்சம் என்பது இல்லாமல், நாம் இருக்க முடியாது அதேபோல எமக்குகண் என்பதும் இல்லாமல் இந்த உலகிலே நாம் வாழ முடியாது. கண் எப்படி எமக்கு அவசியம் என்பதை அனைவரும் உணர்ந்து பார்க்க வேண்டும். கண் எமக்கு அவசியம் போலவே கல்வியும் அவசியம். கல்வியறிவில்லாது போனால் கண் இருக்கும் இடத்தில் இரண்டு புண் இருந்தால் எப்படியிருக்குமோ அப்படியாகிவிடுமாம் எம் நிலை என்கிறார் எமக்கு ஞானநூல் தந்த வள்ளுவனார். பிள்ளைகளே வருந்தியும் படியுங்கள்.

இன்று பயிற்சியோடும் கலந்துரையாடலோடும் செயன்முறையோடும் கூடிய கல்விமுறையும் முத்தமிழில் இயல், இசை, நாடகம் ஆகியனவும், ஓவியம், சிற்பம், சித்திரம், நடனம் இப்படி மனோநிலை கவர்ச்சிக்கும் ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ற பலதரப்பட்ட கல்வி முறையாகும். கற்ற கல்வி முறைகள் வளர்த்தோங்க பர்ணமிக்கின்றன. ஆனால் இன்றைய பரிணமிப்பை அன்றே பாரதியார் நயம்படவும் மிகவும் இனிமையாகும் கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா. (பாரதி பாடல்)

என்ன அழகாக அரவணைத்து காலை எழுந்தவுடன் படிப்பு என்றே கூறிவிட்டார். பின்பு கனிவு தருவது பாடல். என்றார் இந்தப்பாடலில் தெய்வப் பாடல்களான திருமுறை பாடல்களுமே பாடஇனியவை, பாடக் கனிபவை. கல்வியில் சமயக் கல்வி, இலக்கியக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, இன்றைய செயன்முறைக் கல்வி எல்லாம் எம்மை இன்பச் சோலைக்கு அழைத்துச் செல்கின்றன. இன்றைக்கு 50வது, 60வது ஆண்டுகளுக்கு முன்பே உலகில் விஞ்ஞான அறிவு தோன்றி தற்போது புதிய புரட்சிகரமான செயல்களை எல்லாம் தோன்றச் செய்து விட்டது. புரட்சிகரமல்ல புதிய கோள்களுக்குள் வாழ்வு அமைக்கக்கூட மனித அறிவு புகுந்து கொண்டிருக்கிறது. அத்தோடு நாம் சிறுவயதிலேயே சர்வமதங்களையும் அறவழி நின்று போற்றப்பழக வேண்டும். இந்துமதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமியமதம், பௌத்தமதம், எல்லாமே நமக்கு அறவழியையே கூறிநிற்கின்றன. எல்லா மதங்களுமே இறைவனை அடைய வழிசமைத்துத் தருபவை. ஆகவே மதவேறுபாடும் தேவையில்லாத ஒன்று என்பதை நாம் என்றும் மனதில் உணர்வோமாக.

"கற்றுணர்ந்து கடமையொழுகி கற்றவை போலவே நன்நடை நடந்திடுக"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அரியது

**அரியது:** வரிவடிவுடைய வேலைத் தாங்கிய வேலவன் (முருகன்) மூதாட்டி அம்மை ஒளவையாரிடம் கேட்ட கேள்விக்கு ஒளவையார் முருகனுக்குக் கூறிய பதில்.

**பாடல்:** அரியது கேட்பின் வரிவடி வேலோய்
அரிது, அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன், குருடு, செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந் திடுமே.

(ஒளவையார் பாடல்)

**அரியது எது?** கிடைத்தற்கரியதும், பெறமுடியாது பெறப்படும் பிறவியுமே மானிடப் பிறவியாகும். மானிடப் பிறவி கிடைத்தால்! அப்படி மனிதனாகப் பிறந்தாலும், கூன், குருடு, செவிடு, பேடுநீங்கி (அங்க உறுப்புக்கள்) குறைவின்றிப் பிறத்தலும் அரிதிலும் அரிது!!! எல்லா அங்க உறுப்புக்களும் குறைவின்றிப் பிறந்திருந்தாலும் ஆழ்ந்த ஞானமாகிய அறிவும், கண்போன்ற கல்வியும் கிடைப்பதும் அரிதிலும் அரிது! ஞானமும் கல்வியும் கூட ஒரு மானிடப் பிறவிக்கு பெறற்கரிய பேறாகும். இவை இரண்டும் குறைவின்றிக் கிடைப்பதற்கு தளராத விடாமுயற்சியும் இறையருளும் வேண்டும்.

இவை இரண்டும் இறைவனுடைய அருளால் குறைவின்றிக் கிடைத்து விட்டாலும் கூட பின்பும் அரிதானவை இரண்டு உண்டு. ஒன்று தானம், மற்றது தவம் தானமும் தவமும் தான் செய்தலரிது. தானமும் தவமும் நாமாகச் செய்யப் பழகவேண்டும்.

மனிதராகப் பிறந்தால் தான் தானமும் தவமும் செய்ய முடியும். மனிதராகப் பிறந்ததால் அடையும் பெரும் பயனே தானமும் தவமும் தான் செய்தலாகும். இதுவே மனிதப் பிறவியின் பெரும் பேறாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானம்:** அதாவது மறையோருக்குப் பயன்படக்கூடிய தானத்தையும் ஏழைகளின் தேவைக்குரியதான தானத்தை செய்வதும் அத்தோடு வாயில்லாத ஜீவனின் பசிதணிப்பதிலும் பெரும் பயன் உண்டு. பசுவுக்கு வாயுறையுமாக புல்லைத் தருவதும், நீரைத் தருவதும் பெரும் தானமாக அமையும்.

**தவம்:** இறைபக்தியைக் கைவிடாது, இறை பக்தியால்! இறைவனுடைய பாதாரவிந்தத்தையும், முத்தியையும் அடைவதற்குரிய பெரும் தவத்தை செய்தல் வேண்டும். இறைவன் திருநாமத்தை இடைவிடாது உச்சரிப்பதும் பெரிய தவமாகும். அத்தோடு தனக்கென வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதல், பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாதிருந்தலும் பெரும் தவமாகும்.

**தானமும் தவமும் எப்படி எம்மைக் காக்கும்:** நமக்கு வரும் தீமைகளும், துன்பங்களும் வரும் நேரத்தில் நம்மை அறியாமையே, இறைவன் நம்மைக் காப்பாற்றுவார்: என அறவழியைக் கூறும் சைவசமய ஆகம நூல்கள் கூறுகின்றன. நாம் நன்கு கற்றுத் தேறி கற்றபடி அறவழி நின்று நல்ல பண்புகளோடும் நல்ல தொண்டுகளும் செய்து வாழ்ந்தால் எம்மை தொண்டுகள் புரியும் தேவர்கள் போல (வானவர்) இறைவன் ஆக்கிவிடுவார்.

பிள்ளைகளே வானம் மழைபொழியாது விட்டால் பூமி விளையாது பயிர் பச்சை ஒன்றையுமே காண முடியாது. நீர்நிலைகள், ஏரி, குளம் நிறைந்திராது. உயிர் இனம் எல்லாமும் மனிதனும் கூட பசியாலும் தாகத்தாலும் பஞ்சத்தாலும், இறக்க நேரிடும். தானம், தவம் இவை இரண்டும் அறங்களாக நடைபெறமாட்டாது. ஆட்சி கூட ஒருநாட்டில் செங்கோலாட்சியாக நீதிநெறி நின்று நடக்காது போய்விடும் தானமும் தவமும் மேலோங்கினால் தான் நாமும் தேவர்களைப்போல இறை தொண்டு புரியவும் முடியும் என்று அரியது கேட்ட முருகப் பெருமானுக்கு ஔவைப் பிராட்டியார் கூறுகிறார். நாமும் இந்த விளக்கத்தினை விளங்கிக் கொள்வோமாக.

"**அரிது அரிது**" என்பதை நாமும் மிகவும் ஆழமாக எம்மனத்துள் பதிய வைப்போமாக. பதிய வைத்து அதன்படி நடப்பதும் அரியது ஆக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய சுயசிந்தனை



☞ சுயசிந்தனையே ஒருவனை மனிதனாக்கும்

☞ எதையும் ஆற, அமர நிதானமாக சிந்திக்கப்பழகுவதையே முதல் முயற்சியாக்கிக் கொண்டபின்பே போட்டிகளிலோ, காரியங்களிலோ முந்த பழகவேண்டும். மற்றவனை முந்துகிறோம் என்று நடக்கக்கூடாது. எம்மைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

☞ தனது நிலையை மட்டும் முதன்மைப் படுத்தாமல், சுற்றத்தார் சூழ உள்ளவர்களின் கஷ்டங்களையும் அறிந்து அவர்களின் கஷ்ட நஷ்டங்களையும் நிவர்த்தி செய்யப்பழகவேண்டும். சூழ உள்ளவர்களை துன்புறுத்தாமல்ப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

☞ வளர வளர தன்னைத்தானே உணர்தலையும், தனது சுய நினைவில் சுய நிலையிற் தூய்மையாகவும் உணரப்பழகவேண்டும்.

☞ நான் யார்? எனது நிலை என்ன? குடும்பம், பெற்றார், என்ற இரு கண் ஒளிக்கும் எனது பங்களிப்புகள் எனது நிலமைகள் எப்படியானது? என்ற கேள்வி எம்முள் எழுமானால் மனச்சாட்சி பெரும் விரிவடையும்.

☞ சிறு வயதிலேயே சிந்திக்கவேண்டும்!!! பெற்றோர்களின், ஆசிரியர்களின் சூழ உள்ளவர்களின் உள்ளத்தை உறுத்தும் செயல்களுக்கு ஆளாகிறேனா என்று? அப்படியாயின் தன் மனச்சாட்சிக்கமைய அப்படியான செயல்களைக் கைவிட்டு திருந்தி நடக்கத் தயாராக வேண்டும், திருந்துதல் உயற்சிக்கு அச்சாணி போன்றது.

☞ தவறு செய்யும் போது மனதுக்குள் மாசுகள் அழிக்கப்படாமல் ஒட்டிக்கொள்கின்றன! இப்படி ஒட்டிக்கொள்ளுவது உணர்விலேயே தெரியும். உறுத்திக்கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ நாமாகவே தவறை உணர்ந்து ஒப்புக்கொண்டு! இனியும் தவறு செய்யாமல் ஒப்புக்கொள்ளும்போது ! அது நீரில் கழுவப்பட்ட கழிவிக்கொண்டுபோன அழுக்காகி உள்ளம் தூய்மைப்படுகின்றது.

☞ தன்நிலையை நன்கறிந்து! தவறு தவறு என்று தெரிந்துகொண்டே தவறு செய்பவன், தன் முகத்திற்கு முன்னால் மூச்சுவிடவே கூச்சப்படுவான். தன்மனமே தன்னை உறுத்தும் தன்நெஞ்சே தன்னைச்சுடும்.

☞ "உள்ளத்துள் உள்ள விசுவாசமே" உண்மை நிலையில் உயர் வழிக்கும் நம்பிக்கைகும், நன்நடத்தைக்கும் திடசங்கற்பம் வகுக்கும்.

☞ குழப்பமான, சிக்கலான பாதையை தானே தனக்கு வழிசமைத்துக்க் கொள்பவன் தானே தனக்குள் பொய்கூறுகிறான் பிழையை அறிந்திருந்தும், பிழை செய்கின்றான்!

☞ முதன்மை அந்தஸ்தும், நேர்வழியும், தன்னைத்தான் தூய்மைப்படுத்து வதாலேயே கிடைக்கும். தூய்மை வாய்மையால் அமையும். வாய்மையால் அதிகம் சிறப்படையும்.

☞ மனசாட்சியே தெய்வசாட்சி! தனது உள்ளத்தால்! தனது சொந்த சுய உணர்வுகளைத் தானாக உணர்ந்து சுயமாக இயங்குவதே ஆனந்தம் அளிக்கும், அதுவே **மனச்சாந்தியுமாகும்.**

☞ விசுவாசமுள்ள நன் நடத்தையும், அடுத்தவரைப் புண்பட வைக்காத நேசமும், பாசமும் பிறருடைய உணர்வை வதைக்காமல், நல் எண்ணங்களுக்கு கறைபூசாமல் உன்னை போல் பிறரை நேசிப்பதும்! தெய்வத்திற்கு சமமான சுயசிந்தனையே ஆகும்.

19-02-2006 தினக்குரல் பத்திரிகையில் படித்து உணர்ந்ததை பொருள் விளங்கத்தக்க வகையில் இதில் சேர்ந்துள்ளேன். பருத்தியூர் பாலா வைரவநாதன் அவர்கட்கு என் நன்றி.


KOHA
JDL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருத்துவமும் மருத்துவமும்



**பாடல்**

குருத்துவமும் மருத்துவமும் குறைவின்றி செய்வோர்க்கு
கருத்தினிலே நல்வாழ்வு மனைவி மக்கள் நலமடைவர்
பொருத்த மற்று மாணவர்க்கும்: பிணியாக்கும் குறுக்குவழி
செய் வோர்க்கும் திருத்தமற்ற வாழ்வுண்டு சிறப்படையா
அவர் குடும்பம் செருக்குடனே வாழ்ந்தவர்தம் அந்திவாழ்வில்
செயலிழந்து சீரான நோய்வந்து சிதறிவிடும் அவர்பெருமை.

டாக்டர். கலைஞர் மா. கந்தசாமி அவர்களின் பாடல் என்னைக் கவர்ந்தது. க. செபரத்தினம் அவர்களின் பவளவிழா நூலில் இப்பகுதியைப் படித்தேன்.

**பொருள்**

உலகில் சிறப்புணர்த்தி போற்றப்படும் தொழில்கள்! இரண்டு ஒன்று குரு (ஆசிரியர்) மற்றையது வைத்தியர் (மருத்துவர்) ஒரு சமூகத்தில் ஆசிரியரும் வைத்தியரும் உண்மை நிலை மாறாமல் நேர்மையுடன் கடமை புரிய வேண்டும். ஆசிரியர் கடமை உணர்வோடு, மாணவச் செல்வங்களின் உயர்ச்சியையும், ஒழுக்கத்தையும், சிரத்தின் மேற்கொண்டு கற்பித்தலை செம்மையுறச் செய்ய வேண்டும். வைத்தியர் நோயாளிகளின் நோய்களுக்கேற்ற மருந்து மாத்திரைகளை கொடுக்கும் வைத்தியத்தை கருணையோடும் சிறப்புறவும் குறைவின்றிச் செய்ய வேண்டும்.

ஆசிரியரும் வைத்தியரும் இறைவன் படைப்பிலேயே இறைவன் கருத்திலேயே உலகில் உயர்ந்தவர்கள். இவ்இரு பிரிவினரும் உலகின் இரு கண்கள். மனித இனத்தின் கருணாமூர்த்திகள் ஆகவே உயர்ந்தவர்கள் என்பதுவும் உண்மை அவர்களின் உயர்ந்த ஒழுக்கப் பண்பும் உலகிற்கு தேவை. சமூகத்திற்கும் தேவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அருளாலேயே ஆசிரியருக்கும், வைத்தியருக்கும் நல்ல மனைவி, நல்ல மக்கள், நல்ல வாழ்வு, செல்வம் மற்றுமுள்ள எல்லாச் சிறப்புக்களும் தாமாகவே வந்து கிடைக்கப் பெறும். எப்படி என்னின் மேற்கூறப்பட்ட "நல்வழிகளில் நடந்தால்" இவைகள் அனைத்தும் குறைவின்றிக் கிடைக்கும். (இது அவர்கட்கு தாமாகவே கிடைக்கும் அருட் கொடையாகும்) கண்போலப் பேணும் இவ்விரு தொழிலைப் புரிவோரும் தத்தமது தூய்மைத் தன்மையை விட்டு, குறுக்கு வழியில் மாணவர்கட்கு கற்பித்தலையும், நோயாளர்கட்கு மருந்து மாத்திரைகள் கொடுப்பதையும், செய்து வந்தார்களேயானால் தம்மைத் தாமே திருத்த முடியாத சிறப்பில்லாத வாழ்வே இவர்கட்கு பிரதி உபகாரமாகக் கிடைப்பத தோடு முதுமைக் காலத்திலும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். துன்பமும் தானாகவே வந்து சூழ்ந்து கொள்ளும். அப்படிச் சிறப்பில்லாத வாழ்வு அமைந்து விட்டால் ஆசிரியருக்கும், வைத்தியருக்கும் கிடைத்த பட்டம், பதவி, புகழ், திறமை, சிறப்பு எல்லாம் சிதைந்து போகும் ஆகவே, ஆசிரியத் தொழிலும், வைத்தியத் தொழிலும், வைத்தியத் தொழிலும் மிகவும் கண்ணியத்தோடும், மிகமிகக் கவனமாகவும் குறைவின்றியும் கட்டாயக் கடமையாக, நேர்மையுடன் செய்து முடிக்க வேண்டியது அவசியமாகும்.

ஆசிரியரும் வைத்தியரும் ஒரு தேசத்தின் முக்கிய பங்காளிகள் ஆவார்கள் என்பதை இவ்விரு தரப்பினர்களும் நன்குணர்ந்து உயிர்கட்கு உயிர் கொடுத்து உன்னத நிலையடைதல் வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. பிள்ளைகளே வருங்காலத்தில் இஃதை நன்கு உற்று உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL



# அம்பாளின் மறக்கருணை



ஒரு காலத்தில் திருகோணமலை பத்திரகாளி பூசகர் ஒருவர் பூசையினை முடித்துக்கொண்டு இரவு திருக்கதவைப் பூட்டித் தன்வீடு சென்று விட்டார். வீடு சென்ற பின்னர் தன் மகனைக் காணாது திகைத்துப் போனார். எங்கு தேடியும் மகனைக் காணாது கவலையுற்றார்.

எனவே திரும்பவும் அவர் ஆலயம் சென்று மகனைத் தேடினார். மகன் ஆலயத்தினுள்ளே இருப்பதை அறிந்தார். பூசை முடிந்து திருக்கதவை அடைத்த பின்னர் கதவைத் திறப்பது ஆகம விதிகளுக்கு முரணானது என்பதை உணர்ந்து மறுநாட் காலை வந்து மகனை அழைத்துச் செல்வதாக முடிவு செய்தார்.

ஆனால், மனைவியோ இதற்கு இசையவில்லை. புத்திர பாசத்தினால் உந்தப்பெற்ற அவர் மனைவி, உடனே மகனை அழைத்து வர வேண்டுமெனப் பிடிவாதம் காட்டினார். இதனால் மூடிய திருக்கதவை அந்தணர் திறந்தார். அப்படித் திறந்ததுதான் தாமதம் வைரவக் கடவுள் அப்பிளையை இரண்டாகக் கிழித்துப் போட்டார். இப்படி இக்கோயிலுடன் தொடர்புபடுத்தி ஒரு கதை நிலவுகிறது.

இறைவியின் மறக்கருணையை இங்கு காண்கிறோம். புதல்வரைத் திருத்த, பெற்றோர் கண்டிப்பதில்லையா? சில வேளைகளில் தண்டிப்பதில்லையா? ஆனால் அக்கண்டிப்பு, தண்டனை ஊடாகப் பரிவுணர்ச்சியை நாம் காண்கிறோம். அது போன்றதே இறைவியின் மறக் கருணையும்.

சிவஞான சித்தியாரில் உள்ள ஒரு பாடல் மறக்கருணையை எமக்கு அழகாக எடுத்தியம்புகிறது. இதோ அப்பாடல்:

தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி
விளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
பார்த்திடின் பரிவே ஆகும்
இந்தநீர் முறையை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

இறைவியின் முனிவு உண்மையில் பரிவேயாகும். என இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
195121

மெய்கண்ட சாஸ்திரங்களில் சிவஞானபோதம் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இதன் வழிநூல் சிவஞான சித்தியாராகும். சிவனுக்குமேல் தெய்வமில்லை. சித்திக்கு விஞ்சிய நூலுமில்லை. இந்த சிவஞான சித்தியாரில் வரும் மறக்கருணைப்பாடல் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு அருணந்தி சிவாச்சாரியாரால்ப் பாடப்பட்டது.

**பெற்றோரின் கண்டிப்பும் கருணையும் மேற்குறிப்பிட்ட பாடலின் கருத்துரை**

அம்பாளின் மறக்கருணையின் மறைபொருளாக பரிவு, கருணை, இரக்கம் இப்பாடலிலே துலங்குகின்றது. இப்படிப்பட்ட பரிவு, கருணை, இரக்கம் தான் சீற்றத்தின் (சிற்றம் - கோபம் - முனிவு) மறைபொருளாக பிள்ளைகளிடத்தலும் பெற்றோர்களால் காட்டப்படுகிறது என்பதை உணர்க.

பெற்றோர் தாம் பெற்றெடுத்த புதல்வர்களை, புதல்வியர்களை அவர்களுடைய அதாவது பெற்றோருடைய சொற்கேட்டு, கீழ்படிந்து, அழைத்த குரல் கேட்டு, அடங்கி நடக்காவிட்டால், முதலில் உறுக்குவர், அதட்டுவர், ஏசியும், திட்டியும் அடங்காவிட்டால், நல்ல பழக்க வழக்கங்களைக் கைக் கொள்ளாவிட்டால். பின்பு தீயபழக்கத்துக்க பிள்ளைகள் ஆளாகி விடுவார்களே என்று அஞ்சி விளாரினால் (தடி) அடிப்பர். அதற்கும் பிள்ளைகள் அடங்கி வராவிட்டால் தீப்பந்தத்தினால் சுடுவர் தீயபந்தம் (தீய நட்பு - தீய உறவு) என்று கூறும் தீயஉறவினருடன், தீய நண்பர்களுடன் உறவுகளை உண்டாக்கி தம்மை வெறுத்து விடுவார்கள், தீயகுணங்களுக்கு ஆளாகிவிடுவார்கள் என்றே தீப்பந்தம் கொண்டு சுடுவர். இதுவும் பெற்றோரின் ஏக்கத்தோடு கூடிய அதிகப்படியான கருணையும் ஆகும்.

“அன்னையின் சீற்றமும் அருளே” உறுக்கியும், அதட்டியும், விளாரினால் அடித்தும், தீப்பந்தம் கொண்டு சுடுவதும் தீயபந்தம் கொள்ளாதே என்பதும் அதன் மறைபொருளும் பரிவேதான். ஏனெனில் பிள்ளைகளை நல்ல நல்ல பிள்ளைகளாக வாழவைக்க தாய் தந்தையா் எடுக்கும் முயற்சியே என்று **பெற்றோரின் சீற்றமும் கருணையேயாகும் என்பதையும் பிள்ளைகளும் உணர வேண்டும்.**

(திரு. வே. வரதசுந்தரம் அவர்களுடைய அம்பாள் செய்யும் அற்புதங்கள் என்ற நூலின் 21வது அத்தியாயமாக “அம்பாளின் மறக்கருணை” என்ற பாடம் அமைந்திருந்தது. அது இன்று வளர்ந்து வரும் சிறார்களுக்கு நன்கு பயன்படும் என்ற நோக்கோடு பாடலின் கருத்துரையும் சேர்ந்து “பிள்ளைக்குணம்” என்ற நூலில் பிற்சேரிக்கையாகச் சேர்த்துள்ளேன்.





KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி....

"பிள்ளைக் குணம்" இப்போது நூல் வடிவில் உங்கள் கையில் பரிமளிக்கிறது. படித்துச் சுவைத்துப் பயன்பெறுவது உங்கள் உரிமை.

இதனை யாத்து நூலாக்கி உங்கள் கையில் தந்த நூலாசிரியரைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள அவசியமாகும்.

நூலாசிரியை சரோஜிதேவி சிவஞானம், நன்கு கல்வி கற்ற - பண்பாடு நிறைந்த - பல வகைகளிலும் வாசிப்பு ஆற்றல் மிக்க குடும்பத்தில் தோன்றியவர் என்பதை அவரது இந்த ஆக்கத்தினைப் படிக்கும்போது நன்கு உணர்ந்து கொள்வீர்கள் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை.

யாழ்.கலைநகர் சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் திருக்கோணமலை உவர்மலையை வதிவிடமாகவும் கொண்ட இவர் கல்விக் காலத் தில் மட்டுமன்றி குடும்ப வாழ்வில் இணைந்திருக்கும் இந்தக் காலகட்டத்திலும் இவர் தொடர்ச்சியாக பலவற்றை கற்கவேண்டும் என்ற கொள்கையோடு, அதில் தான்பெற்ற நல்ல விடயங்களை மற்றவர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற உயர்ந்த பண்பாட்டினையும் கொண்டவர்.

பல சிரமங்களுக்கு மத்தியிலும் இதனை நூலுருவாக்கி உங்கள் கைகளில் தவழவிட்ட அவரின் தளராத முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொடர்ந்தும் அவர்தன் திறமையை மற்றவர்களுக்கு - ஆக்க அமைப்பில் வெளியிட - இந்த ஆக்கத்தினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறுவதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் துணையாய் நிற்கலாம்.

அவரின் பணி சிறக்க
அவரின் பணி தொடர
அவரின் ஆற்றல் வெளிப்பட
அனைவரும் அவருக்குக்
கைகொடுத்து வளர்ப்போம்.

மூத்த கலைஞர் விருது
ஆளுநர் விருது பெற்ற
நகராட்சி மன்ற முன்னாள் உபதலைவர்
கலாபூஷணம்
தாபி.சுப்பிரமணியம்

92, தபாற்கந்தோர் வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் பதிப்பகம் – திருக்கோணமலை. 026 2220783